Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1617) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 14 (11.10.2003) சனிக்கிழமை இதழ் :11

## 2 லெப். மாலதியின் 16 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும், 2ஆம் லெப்.மாலதியின் 16 ஆவது ஆண்டு நினைவு நாளும் தமிழர் தாயகப் பிரதேச மெங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது

நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் தேசியக் கொடியினை பொது அமைப்புகளின் பொறுப்பாளர் சுதாஸ் ஏற்றிவைக்க ஈகைச் சுடரினை யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள் ஏற்றினார். மாலதியின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையினை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கவிதா அணிவித்தார். இந்த நிகழ்வில் பெருமளவு பொதுமக்களும், போராளிகளும் கலந்துகொண்டனர்.

வடமராட்சியில் உள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் 2 ஆம் லெப். மாலதியின் நினைவு நிகழ்வுகள் நேற்றுக் காலை நடைபெற்றன. நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார்.

ஈகைச்சுடரை மாவீரர் கலைவாணனின் தந்தை கிருஷ்ணபிள்ளை ஏற்றினார். மலர் மாலையினை திரைப்பட வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர் கமல் அணிவித்தார். இந்த நிகழவில் பெருமளவு பொதுமக்களும், போராளிகளும் கலந்துகொண்டனர்.

2 ஆம் லெப் மாலதியின் 16 ஆம் ஆண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் இடம்பெற்ற 2 ஆம் லெப் மாலதி நினைவு நிகழ்வில் கேணல் தீபன் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பெண்கள் இன்று எழுச்சி பெற்று வருகின்றனர்!

### மாலதி நினைவு நிகழ்வில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய சமூகத்திலே அடக்கப்பட்டு முடக்கப்பட்டு கிடந்த பெண்கள் இன்று எழுச்சி பெற்று வருகின்றார்கள். மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். இரண்டாம் லெப். மாலதியின் நினைவு நாள் தான் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

என யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்று மாலை கோப்பாயில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

வாய்ப்பேச்சுக்களில் பெண்ணியம் பற்றி பெருமை பேசும் சந்தர்ப்பத்திலே எமது தேசத்தில் தேசியத் தலைவரின் எண்ணத்திலே உருவாகிய சிந்தனையில் பெண்கள் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்.

ஆணாதிக்க மரபுக் கோட்பாடு உடைந்து வாழ்வில் சம உரிமை பெற்றவர்கள் என்ற கருத்து இன்று தோற்றம் பெற்றிருக்கின்றது. ஆணுக்குப் பெண் சமமாக மாறி இன்று போராட்டத்திலே புதிய சரித்திரம் படைத்துள்ளனர்.

ஒரு மனிதனுடைய வாழ்வென்பது அந்த இனம் கொண்டிருக்கின்ற அறிவியலிலும், தூரநோக்கிலும் விழிப்பிலுமே உள்ளது. போரியல் பங்கீட்டில் ஈழத் தமிழனுடைய போரியல் வரலாற்றில் அறுபது வீதமான பெண்கள் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளார்கள்.

எனவே, அந்தப் போரில் பெண்களின் பங்கு மிகமுக்கியமான நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் சமூகத்தில் அரசியல் பொருளாதார வளர்ச்சிகளும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால்தான் அயர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால வரைபுக்கு வலுவூட்டும் கருத்துக்கள் டப்ளின் கலந்துரையாடல் மூலம் உள்வாங்கினோம்

### பி.பி.சி.பேட்டியில் தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

**வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் குறித்து அயர்லாந்தில் சட்ட நிபுணர்களுடன் நடத்திய கலந்துரையாடல்கள் நேற்றுடன் முடிவடைந்தன. ஐந்து நாட்களாக அயர்லாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் சமாதான முன்னெடுப்புக்களோடு தொடர்புடைய நிபுணர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் இடைக்கால வரைபுக்கு மேலும் வலுவூட்டக்கூடிய கருத்துக்களை உள்வாங்கக்கூடியதாக இருந்ததென, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

பி.பி.சி. தமிழோசைக்கு அவர் அளித்த செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது -

அயர்லாந்தில் எங்களுடைய தமிழ் சட்டவல்லுநர்களோடு இடைக்கால நிர்வாகம் குறித்த வரைபு சம்பந்தமாக கூடி ஆராய்ந்திருக்கிறோம். கடந்த 5 நாட்களாக மேற்கொண்ட பணி நேற்றுடன் பூர்த்தியானது.

அத்தோடு, அயர்லாந்திலே சமாதான ஒப்பந்தங்களோடு சம்பந்தமான நிபுணர்களோடு கலந்தாலோசித்தோம். அயர்லாந்தைச் சேர்ந்தவர்கள், தென்னாபிரிக்கா போன்ற பல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### பொதுஜன ஐக்கிய முன்னணி முடிவு

(கொழும்பு)

பிரதம மந்திரி ரணில் விக்கிரசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சரத அமுனுகம தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்ட முடிவு வெளியிடப்பட்டது.

அங்கு சரத் அமுனுகம தொடர்ந்து உரையாற்றும்போது:-

பிரதம மந்திரி ரணில்விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையில் ஈராக்கிய விடயம் தொடர்பாக அமெ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அயர்லாந்து கலந்துரையாடலுக்கு புலிகளை நாமே அழைத்தோம்!

### அயர்லாந்து வெளியுறவு அமைச்சர் தகவல்

(டப்ளின்)

விடுதலைப் புலிகள் அயர்லாந்து நாட்டில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் தாமே அழைத்ததாக அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் பிறைன் கோவென் தெரிவித்தார்.

இவர்களது உள்ளக பேச்சுவார்த்தை, கடந்த ஒரு வார காலமாக அயர்லாந்து நாட்டில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு இடத்தில் நடந்ததாகவும் தெரிவித்த அவர், அயர்லாந்து அதிகாரிகள் எவரும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றவில்லை எனவும், தெரிவித்தார்.

இது தொடர்பாக அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், வெளியுறவு அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவையும் அயர்லாந்து வெளியுறவு அமைச்சர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று மாலை குண்டுவெடிப்பு; ரணில், சந்திரிகா வீடுகளுக்கு அருகில் சம்பவம்

### இரத்தினக்கல் வியாபாரியின் வீட்டுப்பணியாளர் பலி

(கொழும்பு)

கொழும்பில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வாசஸ்தலம் அமைந்துள்ள றோஸ்மேட் பிளேஸ் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று மாலை இந்தப் பகுதியிலுள்ள இரத்தினக்கல் வியாபாரி ஒருவருடைய வீட்டில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இந்த குண்டு வெடிப்பில் அங்கு வீட்டுப் பணியாளராக கடமையாற்றிய ஒருவர் அந்த இடத்திலே உயிரிழந்தார்.

இந்த வீடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ளது. அத்துடன் ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலம், பிரான்ஸ் தூதரகம் உட்பட பல வெளிநாட்டு இராஜதந்திரிகள், கோடீஸ்வரர்கள் இந்தப் பகுதியில் தங்கியிருக்கின்றனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக உடனடியாக எந்தத் தகவலும் வெளிவரவில்லை என போலி லியனகே

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை ஆங்கில எழுத்தறிவுப் போட்டி முடிவுகள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட ஆங்கில எழுத்தறிவுப் போட்டிகள், திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் நடைபெற்றது. அதன் முடிவுகள் வருமாறு.

### பிரதி எழுதுதல் போட்டி

**தரம் - 10**

வி.கவின்யா (மட்டு. வின்சென்ற் கல்லூரி), ஏ. லோபான் (பூநகரி ம.வி), எச். சிவதர்சினி (சென். மேரிஸ் - திருகோணமலை).

**தரம் - 11**

பொ. எனிட் ஜயனியா (சென். மைக்கேல் - மட்டக்களப்பு), ஏ. அன்ரனி ஜசிந்தா (வடமராட்சி மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரி), எம். நிலானி (பண்டாரநாயக்க ம.வி. கந்தளாய்)

**தரம் - 12**

ப. அனுசுயா (சென். சேவியர் கல்லூரி - மன்னார்), ஈ. பீரிஸ் சுகுந்தனன் (சென். ஜோன்ஸ், யாழ்ப்பாணம்), எ. எம். பஸ்மியா (மொகமட் எஸ்சி. கல்முனை).

**தரம் - 13**

எஸ். ஜெயந்தினி (சிறிசண்முக எச். எல். சி, திருகோணமலை), தி. இளங்கோ (வவுனியா அ. த. க. பாடசாலை), யு. பிருந்தா (வித்தியானந்தா முள்ளியவளை)

**தரம் - 03**

டைரல் டூக் அருள்பிரகாசம் (சென். மைக்கல், மட்டக்களப்பு), எஸ். குகதர்சினி (வெஸ்லி. எச். எஸ். கல்முனை), ஏ. தர்சனா (திருமகள் காசிநாதன் ம. வி. வடமராட்சி)

**தரம் - 4**

எஸ். பஹிமா சலீகா (ஆவிசா மாலிகா ம. வி. அக்கரைப்பற்று), வி. மிதியழகினி (வட. இந்து மகளிர் கல்லூரி), யோ. சாக்தியகினி (கசிலியா அரசினர் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு).

**தரம் - 5**

எம். டென்சியா (கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி), பி. பவதாரணி (பட்டிருப்பு எம்.எம்.வி.), எஸ். மிசையிடு (வட. இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 6**

டி. பீ. சோஹினி நவேதா (பண்டாரநாயக்க பி.எம்.வி. அம்பாறை), எம். எச். எவ். நசாபி (சாஹிரா கல்லூரி, கல்முனை), எஸ். தர்மிளா (வட. இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 7**

கே. விதுசா (இராமகிருஷ்ணா ம. ம.வி. அக்கரைப்பற்று), சரோன் விதுஷன் (சென். சேவியர்ஸ், மன்னார்) ச. கிருத்திகா (வவுனியா றம்பைக்குளம், ஜி.ரி.எம்.வி),

**தரம் - 8**

யு. சகானா (உடுவில் மகளிர் கல்லூரி), வி. ரூபினி (ஆர். கே. எம். பெண்கள் கல்லூரி; கல்முனை), ஏ.கசானா செரீன் (கிண்ணியா முஸ்லிம் ஜி.எம்.வி. மூதூர்),

**தரம் - 9**

ர.பரசாந்தி (சைவப்பிரகாச எல்வி, வவுனியா), எம். ஏ. தில்சத் பானு (கிண்ணியா முஸ்லிம் ஜி.எம்.ரி. மூதூர்), ப.இளகியா (வின்சென்ட் ஜி.எ.எம்.ஸ், மட்டக்களப்பு).

### ஆக்கத்திறன் போட்டி

**தரம் - 10**

ச. கேசிகன் (சென். மைக்கேல், மட்டக்களப்பு), வி.டயானா (சென். மேரி திருகோணமலை), ஏ.ஆர்.எவ். தாரணி (மொகமட் பெண்கள் கல்லூரி, கல்முனை).

**தரம் - 11**

ஏ. ஜே. மிராஸ் அகமெட் (அஸ். சிராஜ் எம்.வி, அக்கரைப்பற்று), நா. சுஜீவா (சைவப்பிரகாச எல்வி. வவுனியா), ஜி. பிரதீபன் ஹாட்லி கல்லூரி, வடமராட்சி).

**தரம் - 12**

எம். ஏ. எம். றிசாஸ் (சாஹிரா கல்லூரி, கல்முனை), பி. கார்த்திகா (உடுவில் பெண்கள் கல்லூரி), ரி. மிதினி (சிறிசண்முகா எச்.எல்.ஜி, திருகோணமலை).

**தரம் - 13**

எம். திருவரஞ்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), சோ.சுகிகாந் (சென். மைக்கேல், மட்டக்களப்பு), சி. சோபனா ( றம்பைக்குளம் ஜி.எம்.வி.வவுனியா)

**தரம் - 6**

கே. கஜன் - ஆர்.ஜே.எம் (இந்துக் கல்லூரி திருகோணமலை), மாதிரி மனோகரன் (றம்பைக்குளம் எம்.வி. வவுனியா), எஸ். சாந்தி (உடுவில் மகளிர் கல்லூரி)

**தரம் - 7**

எஸ். எச். அன்புஜன் (ஆர்.கே. எம். இந்துக்கல்லூரி திருகோணமலை), ரக்ஷனா அஸீஸ் (மொகமட் பெண்கள் கல்லூரி கல்முனை), நிசாந்திகா வ்ாமசிவன் (வேம்படி பெண்கள் கல்லூரி யாழ்ப்பாணம்)

**தரம் - 8**

சங்கீரண சியம்சுந்தர் (வின்செண்ட் மகளிர் மட்டக்களப்பு), ஹர்சயனி வரதராஜன் (வேம்படி மகளிர் யாழ்ப்பாணம்), எம்.ஆர்.ஜெர்றா (அல்மனார் மத்திய கல்லூரி கல்முனை)

**தரம் - 9**

பி. கோபிகரன் (அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை அக்கரைப்பற்று), பிரியந்தி சுவர்ணராஜ் (பெரிய கல்லாறு ம.வி. பட்டிருப்பு), என். நிருசா (சென்.மேரி திருகோணமலை)

### சொல்வதெழுதுதல் போட்டி

**தரம் - 10**

சி. லூசியன் (விபுலானந்தா ம.வி. திருகோணமலை), கலைமணி முரளிதரன் (நெல்லியடி ம.வி), கட்ஜினி சிவதாசன் (சென்.சேவியர் மன்னார்)

**தரம் - 11**

சிரியாங்கரி சத்தியசீலன் (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெகநாதன் வாகீசன் (வவுனியா த.க.பாடசாலை), எஸ்.எல்.எவ்.சப்ரியா (ஆஷாபாலிகா அக்கரைப்பற்று)

**தரம் -12**

கனகரத்தினம் மரிறோ ரூபராசன் (சென்.சேவியர் மன்னார்), ரி. இறோதாரணி (நெல்லியடி எம்.எம்.வி), எஸ். சயந்த ரூபிகா (சண்முகா எச்.எல். திருகோணமலை)

**தரம் - 13**

மொகமட் அப்துல் காஸ்மின் பஜித் (சென்.சேவியர் மன்னார்), ஜரோமி பிரியா செபஸ்ரியன் (வின்சட் கல்லூரி மட்டக்களப்பு), கே. சிந்துஜா (சென்.மேரி கல்லூரி திருகோணமலை)

**தரம் -6**

ஏ.டபிள்யு.எ.சிகாட் ஆக்ஸ் (சாஹிரா கல்லூரி கல்முனை), ரெஜினி ஜிவாந்தி பொன்னையா (வின்சட் கல்லூரி மட்டக்களப்பு), நிசாந்தி சிவானந்தன் (இந்துக்கல்லூரி சாவகச்சேரி)

**தரம் -7**

எஸ். தாரணிகா (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை), சுகிர்தா பாலச்சந்திரன் (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மன்னார்), கே.பி. ருஸ்தா (மொகமட் பெண்கள் கல்லூரி கல்முனை), சதுர்முகம் யூட் சதுரகன் (சென்.மைக்கேல் மட்டக்களப்பு)

**தரம் -8**

எஸ். எல். ஏ. சஜித் (சாஹிரா கல்லூரி கல்முனை), சிவராசா துஸ்கரன் (வவுனியா அ.த.க. பாடசாலை), ரி.டிலானி (உடுவில் மகளிர் கல்லூரி), எம்.வை.சில்மியா (கிண்ணியா முஸ்லிம் ஜி.எம்.வி. மூதூர்)

**தரம் - 9**

பி. கோபிகரன் (அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை அக்கரைப்பற்று), எல்.கே. கிசாந்தகி (காமல் பாத்திமா கல்லூரி கல்முனை), ஆர். அபியைபி (சென்.மேரிஸ் திருகோணமலை), என். சாகினி (இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்).

# லாராவின் சாதனை ஹைடனால் முறியடிப்பு



அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் மேற்கிந்திய அணித் தலைவரான லாராவின் ரெஸ்ற் சாதனையை முறியடித்தார்.

நேற்று சிம்பாபேயிற்கு எதிராக நடந்த ரெஸ்ற் போட்டியிலேயே, ஹைடன் லாராவின் 375 என்ற ஓட்ட எண்ணிக்கையைக் கடந்து 380 ஓட்டங்களை எடுத்து லாராவின் சாதனையை முறியடித்தார்.

ஒன்பது வருடங்களுக்கு முன் இங்கிலாந்துக்கு எதிராக நடந்த ரெஸ்ற் போட்டியில் லாரா 375 என்ற சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

1957 ஆம் ஆண்டு மேற்கிந்தியரான ஹரி சோபஸ் பாகிஸ்தானுக்கெதிராக தனது சொந்த மண்ணில் வைத்து 365 என்ற ஓட்டத்தை எடுத்திருந்தார். 37 வருடங்களுக்கு பின் அதே நாட்டைச் சேர்ந்த லாரா, சொந்த மண்ணில் வைத்து இங்கிலாந்துக்கெதிராக 375 என்ற ஓட்ட எண்ணிக்கையை எடுத்து ஹரி சோபஸின் சாதனையை முறியடித்தார். தற்போது 9 வருடங்களுக்கு பிறகு ஹைடன் சொந்த மண்ணில் சிம்பாப்பேயிற்கு எதிராக இந்தச் சாதனையை முறியடித்தார். இந்தச் சாதனை பற்றி கருத்து தெரிவித்த ஹைடன் என்னால் இதனை நம்பவேமுடியவில்லை. அவுஸ்ரேலியா இந்த சாதனையை செய்ததையிட்டு நான் பெருமையடைகின்றேன் என்றார்.


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்

*426 (302, K.K.S Road Jaffna*

(சி/1636)

நிறைஞ்சனாஸ் சங்கானை

பாலா, திபு நடித்த

அன்பு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

Tuhedo

(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.

பிரசாந், கிரண், நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1619)


# இந்திய பந்துவீச்சாளர் அனில் கும்ளே 350 ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்!



இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று நியூசிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று 41 - 3 என்ற இக்கட்டான நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து அணியினரின் சார்பில் விளையாடிய நதன் அஸ்ரில் 103 ஓட்டங்களைப் பெற்று இந்திய பந்து வீச்சாளர்களுக்கு சவாலாக இருந்தார். நதன் அஸ்ரிலின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் நியூசிலாந்து அணி "பலோஒன்" நிலையில் இருந்து மீண்டது.

டானியல் விட்டோரியும் போல் வைஸ்மனும் விளையாடியக் கொண்டிருந்த நிலையில் நேற்றைய ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

நேற்றைய போட்டியில் இந்திய சுழல் பந்துவீச்சாளர் அனில் கும்ளே தனது 350 ஆவது விக்கெட்டை வீழ்த்தி பந்துவீச்சாளர்களின் பட்டியலில் முக்கிய இடத்தைப் பெற்றார். இவர் அதிக விக்கெட்டை வீழ்த்திய பந்து வீச்சாளர் வரிசையில் 14 ஆவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

## மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ - து)

### கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு - 18.10.2003

மேற்படி எமது சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுக்கள், 2003.10.18 ஆம் திகதியன்று தெரிவுசெய்யப்படவுள்ளது. இது சம்பந்தமான சகல விபரங்களும், இச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும், சகல கிளைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களில் பங்குபற்றி, வாக்களிக்க தகுதியுள்ள இச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனி அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவ்வாறு கூட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் சங்கத்தின் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்கப்படுகிறார்கள்.

*கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை*
*857,கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-1667)

செ.கனகசபாபதி,
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

## சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

## அறிவித்தல்

### கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் - காலம்:- 2003.10.19

வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு செய்யப்பட்ட துணை விதிகளின் 23ஆம் பிரிவின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1998. 05. 19 திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 2003.10.19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களைச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புகளின்படி சமுகமளித்துத் தங்கள் சனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்திக் கூட்டுறவு இயக்கத்தினை சனநாயக ஆளுகை கொண்டதாக செயற்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு அலுவலகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1668)

செ.கனகசபாபதி,
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.




நோயற்ற எதிர்காலச் சமுதாயம் படைத்திட...

அரும்புகளுக்கு உதவுவீர்!

கணக்கு இல: 5-21-2022431-4
(இலங்கை வங்கி மேற்றரக்கிளை)

021-222-2134
0777-678051

அரும்புகள்
சிறுவர் நிதியம்

# வெளிநாட்டு யுவதிகளிடம் பாலியல் சேஷ்டை

## கட்டுநாயக்காவில் சம்பவம்

வெளிநாட்டில் இருந்து வந்த இரு யுவதிகளிடம், பாலியல் சேஷ்டைகளில் ஈடுபட்ட ஆறு இளைஞர்கள் கொண்ட குழுவை, கட்டுநாயக்கா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நீண்ட காலத்திற்குப் பின் வெளிநாட்டில் இருந்து,. நாடு திரும்பிய வவுனியாவைச் சேர்ந்த இரு யுவதிகளை - இளைஞர் குழு ஒன்று ஏமாற்றி அழைத்துச் சென்றுள்ளது. கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து வாகனம் ஒன்றை குதித்த யுவதிகள் வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். அந்த வாகன சாரதியும், அவரோடு இணைந்த குழுவினருமே இந்த இரு யுவதிகளையும் கடத்திச் சென்று, அவர்களுடன் பாலியல் சேஷ்டைகளில் ஈடுபட்டுள்ளனர். பின்னர், யுவதிகளிடம் இருந்து பெருமளவிலான பணத்தையும், நகை களையும் கொள்ளையடித்துவிட்டு, அவர்களைத் தனியே விட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக யுவதிகள் இருவரும் கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே, இக்குழுவினைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக இவ்வாறான சம்பவங்கள் கொழும்பை அண்டிய பிரதேசங்களில் அதிகரித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (01)

# தனியார் மயமாக்கல் தொடர்பாக அரசு - ஜனாதிபதி புரிந்துணர்வு

எதிர்காலத்தில் தனியார் மயமாக்கல் பற்றி ஒரு தீர்மானம் மேற்கொள்வதற்கு அரசுக்கும் - ஜனாதிபதிக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுத்துவது என, அண்மையில் ஜனாதிபதிக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடல் - ஜனாதிபதி மாளிகையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

அரசாங்க மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தை, அரசு - தனியார் மயமாக்க எத்தனிப்பதை, ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். போக்குவரத்து சேவையைத் தனியார் மயமாக்கல் பற்றி அந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியும், ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரான கரீம் பீரிஸ், ஜனாதிபதியின் ஆலோசகர் திருமதி மெல் ஆகியோருடன் அமைச்சர் மிலிந்த மொறகொடவும், அமைச்சின் செயலாளர் டி.டி.ஹேவாகமவும் பங்கு கொண்டனர்.

## முன்பள்ளி சிறுவர்களுக்கு சத்துணவுத் திட்டம்

வலி தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள, நான்கு சிறுவர் முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு, அந்த முன்பள்ளியில் கல்விகற்கும் சிறுவர்களுக்கு கியூடெக் நிறுவனம் சத்துணவுத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளது.

மேற்படி முன்பள்ளி பாடசாலை சிறுவர்களுக்கு போசாக்கின்மை காணப்படுவதாகவும் அதனாலேயே இந்தச் சத்துணவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் கியூடெக் நிறுவனம் தெரிவித்தது.

# சிங்களதேசம் மீண்டும் யுத்தத்தை எம்மீது திணிக்க முற்படுகின்றது

## படையணித் தளபதி சச்சி மாஸ்டர் கூறுகிறார்

"சிங்கள தேசம் மீண்டும் ஒரு யுத்தத்தை எம்மீது திணிக்க முற்படுகின்றது. எனினும், நாம் சமாதான விரும்பிகளாகவே இருந்து வருவதுடன், சமாதானத்தின் மூலமான தீர்வையும், உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதையே எமது தேசியத் தலைவரும் நோக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறார்".

இவ்வாறு - தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட படையணித்தளபதி சச்சி மாஸ்டர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமுக்கு முன்பாகக் கடந்த வருடம் அகிம்சைரீதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றபோது, சுட்டுக் கொல்லப்பட்ட ஏழு நாட்டுப் பற்றாளர்களின் நினைவுதின நிகழ்வு- அவர்களது தூபி அமைந்துள்ள இடத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே படையணித்தளபதி சச்சி மாஸ்டர் மேற்கண்டவாறு கூறினார்.

"வேலூரான்" எஸ்.விவேகானந்தன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் - விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட மகளிர்பிரிவு அரசியற்பொறுப்பாளர் ஏதி, உடும்பன்குள கோட்ட அரசியற்பொறுப்பாளர் க.பிள்ளைவாணன் ஆகியோர் கலந்துகொண்டதுடன், பெருந்தொகையான நாட்டுப்பற்றாளர்களின் குடும்ப உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

படையணித்தளபதி சச்சி மாஸ்டர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தத் தாக்குதலையும் எதிர்கொள்ளத் தயார்நிலையில் இருப்பதாகத் திலக் மாரப்பன கூறியிருக்கிறார்.

எம்மைப் பொறுத்தவரை நாம் யுத்தத்தை மீண்டும் விரும்பவில்லை. ஏனெனில், யுத்தத்தின் அழிவுகளையும், கொடூரங்களையும் உணர்ந்தவர்கள் நாம்.

ஆனாலும், யுத்தம் எமக்குப் பழக்கப்பட்ட ஒன்று. யுத்தத்திற்கு எவ்வேளையிலும் தயார்ப்படுத்தப்பட்டவர்கள் நாம்.

யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள், கொடூரங்களை - மக்களுக்காகச் சீர்செய்து, மீண்டும் கட்டியெழுப்பி, மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவும், அதன்மூலம் சமாதானத்தை நிலைபெறச்செய்யவுமே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்.

நாம் பலமாக இருந்துகொண்டே சமாதானம் பேசுபவர்கள். தமிழர்கள் படைபலமாக உள்ளபோது மட்டுமே, எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

ஆனாலும், நோர்வேயின் அனுசரணையுடன் கடந்த இரு வருடகாலமாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையே உள்ளது.

இன்னும், திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையுடன் இணைந்துள்ள படைமுகாம் அகற்றப்படாமலிருந்து வருகிறது. அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் எந்த நிமிடமும் படையினரது துப்பாக்கி வேட்டுக்கள் தம்மை நோக்கி வரலாமென்ற அச்சத்துடனேயே இருக்க வேண்டிய அவலம் உள்ளது.

இன்று சிறுவர்களை நாம் எமது படையில் இணைத்துக்கொள்வதாகச் சிலர் பொய்ப்பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.

எமது மக்கள் மீது கொடூரங்கள் இழைக்கப்படும்பொழுது, இந்த நீலிக் கண்ணீர் வடிப்போர் என்னசெய்து கொண்டிருந்தனர்.

சிறுவர்களல்லாத எவரும் எமது படையில் இணைவதைத் தடுத்து நிறுத்தமுடியாது.

தமது இனத்தின் உரிமை காக்க முன்வந்து, எம்முடன் இளைஞர்கள் இணைவதைத் தடுப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

மீண்டும் ஒரு யுத்தம் வந்தால், அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவேயுள்ளோம். ஆனால், நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம் இவ்வாறு அவர் கூறினார். (07)



அயர்லாந்து சென்ற விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் - அந்தநாட்டு நாடாளுமன்றம் முன், சட்டநிபுணர்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# நாட்டில் முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட ஆயுதங்கள் சட்டவிரோத பாவனையில்

## உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

நாட்டில் முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள் பாவனையில் இருப்பதாக, உள்துறை அமைச்சின் செயலாளர் ஜுனைட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபை, ஒக்ஸ்பாம் அரச சார்பற்ற நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன், ஐக்கிய நாடுகள் சபையின் சிறிய ஆயுதங்களை கட்டுப்படுத்தும் அமைப்பு, நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டபோது இதனைத் தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 35 ஆயிரம் பேர் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் அநேகமானவர்கள் பாதாள உலகக் கோஷ்டிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்களைப் பொதுவாழ்வுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் பொதுமன்னிப்புப் பிரகடனம் செய்துள்ளது.

அண்மையில் சட்டவிரோத ஆயுதங்களைக் களையும் வகையில் பொது வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிவித்திருந்தும், முப்பதினாயிரம் ஆயுதங்களில் ஆறு ஆயுதங்கள் மட்டுமே அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில், அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் சட்டவிரோதமாக 65 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்த ஆயுதமும் அடங்கும் என ஜுனைட் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்களும் - தமது நாடுகளின் சட்டவிரோத ஆயுதங்களினால் சுமார் ஐந்து இலட்சம் பேர்வரை பலியாகியுள்ளனர் எனக் குறிப்பிட்டனர். (01)

# கண்காணிப்புக்குழு ஆலோசகர் மட்டு.தமிழ் குழுக்களுடன் சந்திப்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக அரசியல் ஆலோசகராக திருமதி கரின் பதவியேற்றுள்ளார். இவர் மாற்றுத் தமிழ் குழுக்களின் மாவட்ட பிரதிநிதிகளைச் சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்து வருகிறார். போர்நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம், இடைக்கால நிர்வாக சபை பற்றிய அபிப்பிராயங்களை அறிவதிலும் இவர் ஈடுபட்டுள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) அலுவலகத்திற்குச் சென்ற திருமதி கரின், அந்த அமைப் பின் மாவட்டப் பிரதிநிதிகளையும் சந்தித்தார். இதன்போது, போரதீவுப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான பாஸ்கரன், மதன் ஆகியோர் - தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கினார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சமாதான முயற்சிகளுக்கு ஒருபோதும் தடையாக இல்லை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் போர்நிறுத்த ஒப்பந்த மீறல்களில், ஒருபோதும் ஈடுபடவில்லை. எனினும், எமது உறுப்பினர்கள் சுடப்பட்டும், காணாமற்போயும் உள்ளனர். இடைக்கால நிர்வாகசபையில் சகல, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கும் இடமளிக்கவேண்டும். ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மக்களுக்கு எதுவும் கிட்டவில்லை. அவர்கள் நெருக்குவாரங்களுக்குள்ளாகவே வாழ்ந்து வருகிறார்கள் என்றும் வரதர் அணி பிரதிநிதிகள் கருத்து தெரிவித்தார்கள்.

# வெளிவிவகார அமைச்சர் ரிரோன் ஐ.நா.செயலாளர் பதவிக்குப் போட்டி

ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதற்காக, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவின் பெயரை அமைச்சரவை சிபார்சு செய்துள்ளது.

இது குறித்து அரசாங்க வட்டாரங்கள் தகவல் தருகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமது அமைச்சர்களுடனான சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவின் பெயரை ஐ.நா. வின் உயர்பதவிக்குச் சிபார்சு செய்துள்ளார் எனத் தெரிவித்தனர்.

## விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம்

# சமாதான பேச்சுக்களை ஊக்குவிக்கும் அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்து

சமாதான பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் விசுவாசமாக செயற்பட்டு வருவதனால், அவர்கள் மீதான தடையை நீக்கும் விடயத்தில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்தவேண்டும் என, தமிழ்க் கட்சி கூட்டமைப்பு - புதிய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி ஜே.லன்ஸ்ன்ரிட்டிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்குமானால், சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகள் மேலும் ஊக்கமுடனும், உற்சாகத்துடனும் ஈடுபடுவதற்கு இது வழிவகுக்கும் எனவும், கூட்டமைப்பு - தூதுவரிடம் எடுத்துக் கூறியுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளருமான இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பு இணைப்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரே அமெரிக்க தூதுவரைச் சந்தித்து வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

தற்போதைய சமாதான முயற்சியைத் தக்கவைப்பதறகாகவே இடைக்கால நிர்வாகசபை அவசியமானது. சில சமயங்களில் விடுதலைப் புலிகள் கூடுதல் அதிகா ரங்களைக் கோரலாம். ஆனால், அது ஏற்புடையது. தமிழ் பிரதேசங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது ஏற்கனவே தமிழ் மக்களினாலும், தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும்.

அத்துடன், நிரந்தர அரசியல் தீர்வும் அவ்வாறுதான் அமையவேண்டும் என்பதற்கான சமிக்ஞையாகவும் அது அமையவேண்டும். அதற்குரிய வகையில் அமெரிக்கா ஆதரவு வழங்க வேணடும். அதேபோன்று, விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க விடயத்திலும் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். புலிகள் தற்போது அரசியல் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றனர். சமாதான பேச்சிலும், விசுவாசமாகத் தம்மை அர்ப்பணித்திருக்கின்றனர். இநநிலையில், புலிகள் மீதான தடை நீக்கப்படுமானால், அது புலிகளுக்கு மேலும் உற்சாகமளிக்கும்.

எனவேதான், தடையை நீக்குவது குறித்து அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யவேண்டும். இதே வேளை, மீள்குடியேற்ற விவகாரத்தில் - அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. உயர் பாதுகாப்பு வலயம் எனக் குறிப்பிட்ட சில பிரதேசங்களை, இராணுவம் தம்வசப்படுத்தியுள்ளது. இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் விடயத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நற்பயன்களும் கிட்டவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்திலும், இராணுவத்தின் அச்சுறுத்தல்களும், தலையீடுகளும் தொடர்கின்றன.

ஆகவேதான், அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளின் ஆதரவும், உதவியும் தொடர்ந்தும் அவசியமாகத் தேவைப்படுகின்றது. அரசாங்கத்திற்குச் சில விடயங்களை எடுத்துக்கூறவேண்டிய நிலையுமுள்ளது எனக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் விளக்கிக் கூறியதாகத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த புதிய அமெரிக்க தூதுவர் -

தடைநீக்க விடயத்தில் அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யும். அமெரிக்க சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே அது குறித்து ஆலோசிக்க வேண்டும். ஆனாலும், விடுதலைப் புலிகள் தமது போக்கில் மேலும் சில மாற்றங்களைச் செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளில் மேலும் பல முன்னேற்றங்களை எட்டுவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு. அதனையே அமெரிக்கா எதிர்பார்க்கின்றது. தமிழர் போராட்டத்தை அமெரிக்கா நன்கு அறியும். தமிழ் மக்களின் நீண்டகால போராட்ட வரலாறுகளையும், அரசியல் அபிலாஷைகளையும் அமெரிக்கா நன்கு புரிந்துகொண்டுள்ளது. நிரந்தர அரசியல் தீர்வுக்கு முன்னர், இடைக்கால நிர்வாகசபை அமைய வேண்டும் என்ற தமிழ் மக்களின் நிலைப்பாட்டை அமெரிக்கா ஆதரிக்கின்றது. அது குறித்து இலங்கை அரசாங்கத்துடனும் அமெரிக்கா பேசியிருக்கின்றது என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

# எமது இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்ட கலை, கலாசார விழுமியங்கள் பேணப்படவேண்டும்

## வலி.வடக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணுவதற்குக் கலைகளும், எமது கலாசார செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டியது காலத்தினுடைய கட்டாயமாகும் எனத் தெரிவித்தார் வலி.வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா.

வலி.வடக்கு பிரதேச கலாசார விழா தொடர்பாக, அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். வலி.வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் க.இராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - அளவெட்டி பன்னாலை, இளவாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அறுபதிற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர்.

பிரதேச செயலர் தொடர்ந்து கருத்து கூறுகையில் - எமது தமிழ்மொழி இன்னும் சில காலப்பகுதிக்குள் அழிந்து விடுமோ எனச் சிலர் அச்சம் தெரிவிக்கிறார்கள். மெல்லத் தமிழ் இனிச் சாகுமா என்ற கேள்வியும் எழுப்புகிறார்கள். அத்தகைய தொருநிலை ஒருபோதும் தமிழ் மொழிக்கு ஏற்படாது.

ஆனாலும், நாம் எமது இனத்தின் தனித்துவத்தை உலக அரங்கிலே நிலைநிறுத்த வேண்டியுள்ளது. நாம் யார் என அடையாளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதனாலேயே, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் அநேகமானோர் - எமது சடங்குகளையும், கலாசாரங்களையும் பேணுவதற்கு முனைகிறார்கள்.

அங்கு வாழும் தமிழ் பிள்ளைகள் மொழியியலால் தம்மை அடையாளம் காட்டமுடியாத சூழல் உள்ளது. அதனால் விழாக்கள், சடங்குகள் என்பவற்றின் மூலமாகத் தம்மை இனங்காட்ட விளைகிறார்கள்.

கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் நடைபெறும் திருமண வைபவங்களில், எமது தாய் நாட்டில் கடைப்பிடிக்கப்படுவதைவிட, அதிகளவான சடங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதைப்பார்த்போது நான் ஆச்சரியப்பட்டேன்.

இன்றைய உலகமயமாக்கலின் விளைவினால், நாம் கால நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடக்கூடாது. ஆலயங்களையும், கலை விழாக்களையும் - பல்லாயிரக்கணக்கான ரூபா பணத்தைச் செலவழித்துக் கொண்டாடும்போது, சிலர் அவற்றைத் தேவையில்லையென விவாதிக்கிறார்கள். அதற்குக் காரணமாக எமது நாட்டின் பொருளாதாரநிலையைச் சுட்டிக்காட்டி, தொழிற்சாலைகளை அமைத்தால் நன்மை பயக்கும் என்கிறார்கள்.

அதில் தவறு இல்லை. அவையும் அவசியம். ஆனாலும், எமது இன தனித்துவத்தைப் பேண, நாம் எமது பண்பாட்டுக் கலைவடிவங்களையும், புராதன கட்டடங்களையும் புனர்நிர்மாணிக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

இன்று அநேகமான எமது கிராமியக் கலைகள் அழிந்து போகும் நிலையில் உள்ளன. அவற்றை அந்த நிலையில் இருந்து மீட்டெடுக்க, இத்தகைய கலாசார விழாக்களைக் கொண்டாட வேண்டிய தேவையுள்ளது எனவும் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலக கலாசார விழா - இந்த வருட இறுதிக்குள் நடைபெறவுள்ளது. இந்த விழா இரு கட்டமாக நடைபெறவுள்ளதாகக் வலி.வடக்கு கலாசார உத்தியோகத்தர் ம.அருள்சந்திரன் தெரிவித்தார்.

முதலில் அளவெட்டி, பன்னாலை, இளவாலை ஆகிய கிராமங்களை இணைத்து ஒரு விழாவும், பின் மல்லாகம், தெல்லிப்பளை, வலி.வடக்கின் ஏனைய பகுதிகளை இணைத்து இனனொரு விழாவும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கலாசார விழா தொடர்பாக, வலி.வடக்கு கலாசார பேரவையின கீழ் உப குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் முழுமையான பங்களிப்புடன் நடைபெறவுள்ள இந்த விழாக்களில், பாரம்பரிய கலைநிகழ்வுகள், கூத்து, கலைஞர் கௌரவிப்பு, என்பன இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாரம்பரிய கலை வடிவங்கள் அடங்கிய ஊர்திப் பவனியும், கண்காட்சி நிகழ்வுகளும் இதனையொட்டி நடைபெறவுள்ளன. அளவெட்டி சுப்பிரமணிய சுவாமிகள் கலையரங்கத்தில் மூன்று நாட்கள் இந்த கலாசார விழா நடைபெறவுள்ளது.


# இலங்கை இலக்கியப் பேரவையின் கௌரவிப்பு பெறும் எழுத்தாளர்கள்

கடந்த ஐந்து வருடங்களுக்குள் வெளிவந்த சிறந்த இலக்கியப் படைப்புக்களின் படைப்பாளிகளை - இலக்கியப் பேரவை பரிசு வழங்கி கௌரவிக்கவுள்ளது. இதற்குத் தெரிவு செய்யப்பட்ட எடுத்தாளர்களின் பெயர் விபரங்களை இலக்கியப் பேரவையினர் வெளியிட்டுள்ளனர்.

**ஆய்வு** - பத்திரிகையாளர் நடேசய்யர் - சாரல் நாடன் (1998), தமிழர் முழவியல் - சி.மகேந்திரன் (1999), பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம் - ரூபன் மரியாம்பிள்ளை (2001), ஈழத்து இலக்கியச் செல்நெறி - கலாநிதி க.குணராசா (2001)

**நாவல்**- வன்னியர் திலகம் - முல்லைமணி (1998), கருக்கொண்ட மேகங்கள் - ப.ஆப்டீன் (1999), தர்மங்களாகும் தவறுகள் - அ.ஸ.அப்துலஸமது, மரணங்கள் மலிந்த பூமி - செங்கை ஆழியன் (2000), மன நதியின் சிறு அலைகள் - கே.விஜயன் (2000), இனி வானம் வெளிச்சிரும் - தமிழ்க்கவி (2002), கானலில் மான் - தெணியான் (2002)

**சிறுகதை**- ஆளடையாள அடையும் ஐந்து ரூபாவும் - எஸ்ஏச்றி. மத் (1997), அல்சேஸனும் ஓர் பூனைக் குட்டியும் - தி.ஞானசேகரன் (1998), புதிய பரிமாணங்கள் - புலோலியூர் க.சதாசிவம் (1998), கசின் சிறுகதைகள் - கசின் சிவகுருநாதன் (1999), சிவாவின் சிறுகதைகள் - வண்ணை கே.சிவராஜா (1999), வேட்கை - நீர்வைப் பொன்னையன் ( 2000), சுதாராஜின் சிறுகதைகள் - சுதாராஜ் (2000), சத்திய தரிசனம் - சிற்பி சரவணபவன் (2001), யுகமொன்று உடைகிறது - ஆரையம்பதி ஆ.தங்கராஜா (2001), முனியப்பதாசன் கதைகள் - முனியப்பதாசன் (2001), சர்ப்பவியூகம் - செம்பியன் செல்வன் (2002)



சுதுமலை இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட, குபேரநாதன் பாடசாலையின் கொடியினை ஏற்றுவதையும், அருகில் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம். (91)

## 175 ஆவது நிறைவு மலர் வெளியீட்டு விழா

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா, பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை பிரதம நூலகர் ஏ.என்.எஸ் திருச்செல்வம் மலரை வெளியிட்டு வைத்து, வெளியீட்டுரை நிகழ்த்துவார். மலரின் முதற்பிரதியை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள இளைப்பாறிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் திலகவதி பெரியதம்பி பெற்றுக்கொள்வார்.

## கசிப்பு உற்பத்தியால் மக்கள் விசனம்

அரியாலை பொன்னம்பலம் சந்தியை அண்டியுள்ள பகுதியில், சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதால், அப்பகுதி மக்கள் - பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகிறார்கள்.

இங்கு, கசிப்பைக் குடிக்க வரும் சிலர் - தேவையற்ற சண்டைகளில் ஈடுபடுவதுடன், கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்தும், அப்பகுதியால் போக்குவரததுச் செய்யும் மக்களை மிரட்டுவதாகவும் தெரிய வருகிறது.

அது பற்றி பொலிஸாரிடம் முறையிட்டும், எந்தவித பலனும் கிடைக்கவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (55)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டமும், கணக்கறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குச் சங்கத் தலைமைக் காரியாலய சந்திரராசா மண்டபத்தில், எஸ்.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக - பனை தென்னை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எண்பார்வை ஜே.சிவலிங்கம் ஆகியோர கலந்துகௌள்ளவுள்ளனர்.



ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தனது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக அகில இலங்கை ரீதியில் நடத்திய "சிறகடிக்கும் ஆசைகள்" என்ற வினாவிடைப் போட்டியில்,

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் உயர்தரத்தில் கல்வி கற்கும் செல்வன் தேவராசா தேவமௌலீசன் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு - இன்று மாலே பயணமாகின்றார்.

# வெளிச்ச வீடுகளை புனரமைக்க கோரிக்கை

யாழ். குடாநாட்டின் கடற்கரையோரங்களிலுள்ள வெளிச்சவீடுகள்- நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமையினால், அவை உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டுமென வடமாகாண கடல்நீர்வளத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.ஜோசப் - அரசாங்கத்துக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

காங்கேசன்துறை, பருத்தித்துறை, காரைநகர், மருதங்கேணி மற்றும் கடற்கரையோரங்களிலுள்ள வெளிச்ச வீடுகளே பராமரிப்பின்றி, புனரமைக்கப் படாமல் சரிந்து விழும்நிலை எற்பட்டுள்ளது.

இந்த வெளிச்சவீடுகளைப் புனரமைத்தால், மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பெரிதும் நன்மை அடைவர். அதேவேளை காங்கேசன்துறை, பருத்தித்துறை - துறைமுகங்கள் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ச.சாருகா
முகவரி : 39, வேலப்பர் லேன் அரியாலை.

மூன்றாவது அகவையில்



பெயர் : தி.அபிநயன்
முகவரி : 182/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாவது அகவையில்



பெயர் : கு.ருசாந்தன்
முகவரி : சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு.

பத்தாவது அகவையில்



பெயர் : கி.ஜெரோபேட்
முகவரி : 39. செம்மணி வீதி நல்லூர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்



# சந்தேகம் → விளக்கம்

❑ கடல் நீர் கொந்தளிப்பதுபோல் இருக்கின்றது. இது ஏன்?

வாயகன்ற பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் நீரை நிரப்புங்கள். பின்னர், அதன் மேற்பரப்பில் காற்றை ஊதுங்கள். இப்போது நீர் கொந்தளிப்பதுபோல் அலை உண்டாகும்.

இதேதான் கடற்கொந்தளிப்பிலும் நடக்கிறது. கடலில் பலத்த காற்று வீசும்போது, நீர்ப்பரப்பின் மேல் பெரிய அலைகள் உண்டாகின்றன. இந்த அலைகள் நிரைய ஏற்படும்போது, கடல்நீர் கொந்தளிப்பதுபோல் தெரிகிறது.

❑ இடி உண்டாகும்போது கடகடவென உருளும் ஓசை ஏன் எழுகிறது?

இப்படி உருளும் சத்தம் கேட்பதற்குக் காரணம்.- தொடர் எதிரொலிப்பு முறைதான். வான்மண்டலத்தில் உருவாகும் காற்றோட்டத்தால், மேகங்கள் ஒன்றை ஒன்று நெருங்குகின்றன, விலகிச்செல்லவோ முற்படுகின்றன. அப்போது மின்னல் தோன்றிய மேகக்கூட்டத்திலிருந்து எழும்பும் இடியோசை, அருகில் நெருங்கும் மேகப்பரப்பில் மோதி எதிரொலிக்கிறது.

இந்த எதிரொலி - இடி தோன்றிய மேகத்துக்குச் சென்று, பலவீனமடைந்து மீண்டும் எதிரொலிப்பது உண்டு. இவற்றைத் 'தொடர் எதிரொலிப்பு' என்று கூறுகிறார்கள். இந்த தொடர் எதிரொலிப்புக்களைத் தனித்தனியாகக் கேட்கமுடியாது. ஆகையால், இடி - உருளுவதைப்போலவும், உறுமுவதைப் போலவும் கேட்கிறது.

# கால்பந்தாட்டத்தின் கதை



உலகம் முழுவதும் இன்று பிரபலமாக இருக்கும் கால்பந்து விளையாட்டு, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆசியாவில்தான் தொடங்கியது. ஜப்பானியர்களுக்கும், சீனர்களுக்கும் இடையே, கியோட்டோ நகரில் இந்தப் போட்டி நடந்ததாகவும், தோல் பைகள் முடியை அடைத்துத் தயாரிக்கப்பட்ட பந்தைக்கொண்டு, இந்தப் போட்டிகள் நடந்ததாகவும் - சீன வரலாற்றுப் புத்தகங்கள் கூறுகின்றன. அந்தப் போட்டிகளில் ஒவ்வொரு அணிக்காகவும் தலா 27 வீரர்கள் களத்தில் இருந்தனர்.

ஆசிய நாடுகளில் தோன்றிய இந்த ஆட்டம் - சுற்றுலாப் பயணிகள் மூலமாக உலகின் மற்ற பகுதிகளுக்கும் பரவி, வேகமாக வளர்ந்தது. கால்பந்து போட்டிகள் நடக்கும்போது, அதிகமாகக் கூச்சல் சத்தம் வருகிறது. இந்தக் கூச்சல் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரானது என்று கூறி, 1307 இல் இதற்குத் தடைவிதித்தார் இங்கிலாந்து மன்னர் எட்வர்ட். தடையை மீறிக் கால்பந்து ஆடும் குடிமக்களுக்குச் சிறைத் தண்டனையும் விதித்தார். அவரது வாரிசுகளும் இதேபோல கடுமையான தடைகளை விதித்தனர். கடைசியில் கால்பந்து வீரர்களின் போராட்டத்துக்குப் பிறகே, 1681 இல் கால்பந்து விளையாட்டை ஆட, இங்கிலாந்து அரசு அனுமதி கொடுத்தது. பின்னர் நவீனப்படுத்தி, தற்போதுள்ளநிலையை இங்கிலாந்து வீரர்கள் கொண்டுவந்தனர்.

# கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

கீழேயுள்ள 81 கட்டங்களில் யாழ்.மாவட்டத்திலுள்ள 21 ஊர்களின் பெயர்கள் ஒளிந்துள்ளன. கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, மேலிருந்து கீழாகவோ உள்ள அப்பெயர்களை அடையாளம் கண்டு, அவற்றைச் சுற்றி வட்டமிடுங்கள் பார்க்கலாம்.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ச | ர | சா | லை | ழா | ஏ | தா | வ | டி |
| ணி | க | ப் | சா | வ | க | ச் | சே | ரி |
| ர | ர | ளை | மீ | க | கொ | இ | ர் | றை |
| வ | வெ | ம | ச | லி | க் | ள | ஓ | த் |
| சா | ட் | டி | த் | கை | ரு | வா | ல் | த் |
| கொ | டி | கா | ம | ம் | வி | லை | ந | டு |
| ய | கோ | ண் | டா | வி | ல் | வி | டு | உ |
| ப | ரு | த் | தி | த் | து | றை | அ | ப |
| ய் | பா | ப் | கோ | ல் | ய | வ | ல் | க |

செ.சுதாகரன்
மட்டுவில் வடக்கு.

**சென்றவார வார்த்தை விளையாட்டு விடைகள்**

1. ஆச்சரியக்குறி
2. சங்கல்பம்
3. கடைப்பிடி
4. பிரகாசம்
5. காட்டுத் தீ
6. தீர்மானம்

## எலி தன் வீட்டை அடைய வழிகாட்டுங்கள்



இங்கே மடிக்கவும்






# சிறுவர் அரங்கம்

# இராமுவின் சாதுரியம்

சிறுவன் இராமு தன் தந்தையுடன் காட்டிற்கு மகிழ்ச்சியுடன் செல்வான். அங்கே அவன் தந்தை - காட்டில் வெட்டும் பெரிய மரங்களை, தான் பழக்கி வைத்துள்ள யானைகளைக் கொண்டு தூக்கிச் செல்வார்.

அவர் என்ன சொல்கிறாரோ, அதன்படி அந்த யானைகள் நடக்கும். தூக்கிச் செல்லும் மரங்களை எல்லாம் பக்கத்தில் உள்ள ஆற்றில் யானைகள் போடும். அந்த மரங்கள் ஆற்றில் மிதந்துகொண்டே, நகரத்திற்கு வரும். அங்கிருக்கும் அவருடைய அலுவலர்கள் அந்த மரங்களைக் கரைக்குக் கொண்டு வருவார்கள்.



தந்தை எப்படி எல்லாம் யானைக்கு கட்டளை இடுகின்றார், எந்தெந்த வேலைக்கு என்னென்ன கட்டளை என்பதை எல்லாம் மிகக் கவனமாகக் கவனித்து வந்தான் இராமு.

ஒவ்வொருநாளும் மாலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு வீட்டுக்கு வந்துசேரும் அவன் தந்தை - ஒரு நாள் மாலை குறித்த நேரத்திற்கு வீடு வந்து சேரவில்லை.

இராமுவை பார்த்து "காட்டிற்குச் சென்று, உன் தந்தை ஏன் இன்னும் வரவில்லை என்று பார்த்து வா" என்று சொன்னாள் அவன் தாய்.



உடனே இராமு காட்டை நோக்கி விரைந்தான். காட்டில் தந்தை வேலை செய்யும் இடத்திலிருந்து முனகல் ஒலி கேட்டது. சத்தம் வந்த இடத்தைச் சென்று பார்த்தான். அங்கே அவன் தந்தையின் கால்களின் மேல் பெரிய மரம் ஒன்று விழுந்துகிடந்தது. அவரால் கால்களை விடுவிக்க முடிய வில்லை. இராமு மரத்தை நகர்த்த முயற்சி செய்தான். அது சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை.

அவனுக்கு யானையின் நினைவு வந்தது. யானைகள் கட்டப்பட்டுள்ள இடத்திற்குச் சென்றான். ஒரு யானையை அவிழ்த்துக் கொண்டு வந்தான். தன் தந்தை கட்டளையிடுவது போலவே, யானையைப் பார்த்து தந்தையின் மேல் விழுந்திருந்த மரத்தைத் தூக்குமாறு சொன்னான். அந்த யானை துதிக்கையினால் அந்த மரத்தைத் தூக்கி, இராமுவின் தந்தையை விடுவித்தது.

விடுபட்ட தந்தை தன் காலில் காயம் பட்டுவிட்டதே என்று கூடக் கவலைப்படவில்லை. தான் கற்பிக்காமல், தானாகவே யானை மொழியைக் கற்றுக்கொண்ட மகனின் ஆர்வத்தையும், அறிவுக்கூர்மையையும் நினைத்து மகிழ்ந்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஊசியுடன் அலைவான், டொக்டர் அல்ல. ஊசி போட்டால் அது மருந்துமல்ல - விஷம். அது என்ன?
2. சிரித்தால் சிரிப்பேன். அழுதால் அழுவேன். நான் யார்?
3. தரணிக்கு ஒளிதர, தண்ணீருக்குள் மூச்சடக்கினான் அவன் யார்?
4. உருவத்தில் ஒன்றானவன், வெளிச்சத்தில் மட்டும் உடன் வருவான் அவன் யார்?

**விடைகள்**

1. தேள்.
2. முகம் பார்க்கும் கண்ணாடி.
3. முத்துக் குளிப்பவர்.
4. நிழல்.

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# தென்னாபிரிக்கா



மொழி - ஆபிரிக்க மொழிகள், ஆங்கிலம்.
தலைநகரம் - பிரிட்டோரியா.
சமயம் - கிறிஸ்தவம்.
நாணயம் - ராண்ட்.
சராசரி ஆயுள் - 53.2
முக்கிய நகரங்கள் - ஜொகனஸ்பேர்க், பிரிட்டோரியா, கிம்பர்லி, டர்பன்.

இருண்ட கண்டம் என்று அழைக்கப்பட்ட ஆபிரிக்காவின் தென் முனையில் அமைந்துள்ள நாடு - தென்னாபிரிக்கா ஆகும். இந்த நாடு இந்தியப் பெருங்கடலிலும், அத்திலாந்திக் பெரும் கடலிலும் கடற்கரைப் பகுதிகளைக் கொண்டுள்ளது.

இந்த நாட்டை டச்சுக் காரர்களிடமிருந்து 1806 இல் பிரிட்டன் கைப்பற்றியது. 1948 முதல் பிரிட்டிஷ் கொலனியாக இந்த நாடு இருந்தபோது, நிறவெறி தலைவிரித்தாடியது. மக்கள் தொகையில் 74% உள்ள கறுப்பின மக்களுக்கு, 1990 ஆம் ஆண்டு வரை வாக்களிக்கும் உரிமைகூட வழங்கப்படவில்லை.

இவர்கள் உரிமையற்றுப் போய் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு இருந்தார்கர். 1990 ஆம் ஆண்டு இனப்பாகுபாட்டுக்கு எதிராகக் கொதித்தெழுந்த கறுப்பின மக்களின் போராட்டம் வெற்றிபெற்றது. 27 ஆண்டுகள் சிறையிலிருந்த நெல்சன் மண்டேலா - விடுதலை செய்யப்பட்டார்.

1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று, தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரானார் மண்டேலா. தொடர்ந்து மண்டேலாவுக்கு - நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஹலஹாரி என்ற பாலைவனம் இங்குள்ளது. இந்த நாட்டில் வனவிலங்குகளாக - யானை, சிங்கம், சிறுத்தை, காண்டாமிருகம், வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, மான், ஆகியவை உள்ளன.





இதயமாற்று அறுவைச் சிகிச்சையைத் தென்னாபிரிக்காவில் டொக்டர் கிறிஸ்டியன் பெர்னார்ட்- 1967 இல் முதன் முறையாகச் செய்தார்.

உலகிலேயே தங்கம் அதிகம் உற்பத்தி செய்யும் நாடு இதுதான். உலகப் புகழ் பெற்ற கிம்பர்லி வைரச்சுரங்கம் இங்குதான் உள்ளது.

நாட்டின் முக்கிய உற்பத் திப் பொருட்களாக விவசாயம் - கோதுமை, கரும்பு, அப்பிள், கோழி, ஆடு, மாடு. உற்பத்தி - இயந்திரங்கள், தாதுப்பொருள். பதப்ப டுத்தப்பட்ட உணவு, துணிகள். கனிமங்கள்- நிலக்கரி, செம்பு, தங்கம், வைரம், இரும்பு, யுரேனியம், பிளாட்டினம், ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றது.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
அ.விஜயகுலராஜா
கற்கும் பாடசாலை :-
பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், நாடகம் நடித்தல், கிரிக்கெட்.



முழுப்பெயர் :-
ஸ்ரீ.கஸ்துலராஜ்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோமன் மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- வி.யதுர்சன்
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- கு.தனுசன்
கற்கும் பாடசாலை :-
த்ம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பாட்டு.

முழுப்பெயர்:- செ.ஐங்கரன்
கற்கும் பாடசாலை :-
மானிப்பாய் விவேகானந்தா கல்லூரி
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், கிரிக்கெட்.

முழுப்பெயர்:- சா.பிரதீபன்
கற்கும் பாடசாலை :-
பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:- ந.தர்சினி
கற்கும் பாடசாலை :-
கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்
கற்கும் தரம் : 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்

# சிந்தனைத் துளிகள்

- துன்பம் இல்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு, அடைந்த இன்பமே ஓர்நாள் அவனுக்கு துன்பத்தை தரும்.
- நொந்தவன் வாழ்க்கையை படிப்பினையாகக் கொள். உயர்ந்தவன் வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொள்.
- நல்ல நண்பனுடன் பழகும்போது, நல்ல குணங்கள் அதிகரிக்கும். தீய நண்பனுடன் பழகும்போது, இருக்கின்ற நல்ல குணங்களும் அழிந்துவிடுகின்றன. துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத் தேய்வது மேல்.

ந.அனுஜா
தரம் - 8, யாழ். இந்து மகளிர் கல்லூரி.

இங்கே மடிக்கவும்




# ஏமாந்தியா? (சென்ற வாரத் தொடர்ச்சி......)





(தொடரும்.....)

# உங்கள் கைவண்ணம்



சி.கரிகரன்
தரம் - 7
கொக்குவில் இந்துக் கல்லூரி.



மு. சுரேஸ்
தரம் - 9
தேவரையாளி இந்துக் கல்லூரி.

# எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி. இதனைக் கட்டுவித்தவர் பீற்றர் பேர்சிவல் பாதிரியார். இங்கு ஏறத்தாழ 2000 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். 72 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.

இது யாழ். மாவட்டத்திலேயே மிகப் பெரிய பெண்கள் பாடசாலை ஆகும். இதன் தற்போதைய அதிபர் திருமதி க. பொன்னம்பலம்.

இவர் இப்பொழுது இந்தப் பாடசாலையை மிகவும் முன்னேற்றகரமாக நடத்திக் கொண்டிருக்கின்றார்.

**வைணவி**
**வேம்படி மகளிர் கல்லூரி.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்*
*அழுதகண் ணீரும் அனைத்து*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# சமாதானகால நன்மைகள் அரசுக்கே ஒழிய, புலிகளுக்கல்ல!

இன்றைய சமாதானச் சூழலுக்கான முக்கிய காரணியான போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது - யாருக்கு மிகவும் அனுகூலமான வாய்ப்புக்களையும், பாதுகாப்பையும் வழங்கியிருக்கிறது என்றால் - அது ஆளும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கும், தென்பகுதி சிங்கள மக்களுக்கும் தான் என்பதில் ஐயமேயில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் யுத்தசந்நதம் கொண்ட ஆட்சிக் காலத்தில் - அதாவது அவர்களின் ஏழாண்டுகால தமிழ் மக்களுக்கெதிரான போர் நடவடிக்கை தீவிரம் கொண்டிருந்த காலத்தில் - சிறிலங்காவின் சகல வளங்களும் போருக்காகவே பயன்படுத்தப்பட்ட வேளையில் - சிறிலங்காவின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடந்தது.

சூரியக்கதிர் முதல் ஜெய்சிக்குறு படை நடவடிக்கை வரையிலான சகல இராணுவ நடவடிக்கையின் மூலமும் அரசுக்குக் கிடைத்த இராணுவரீதியிலான சகல வெற்றிகளும் - அரசின் அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற்கு மட்டுமே உதவிய அதேவேளை, சிறிலங்காவின் பொருளாதாரத்தை அடிமட்டத்திற்கு... அதாவது வங்குறோத்து நிலைக்குக் கொண்டுபோனதே உண்மையானதாகும்.

அபரிமிதமான இராணுவக் கொள்வனவும், அளவுக்கதிக மான இராணுவக் கொடுப்பனவுகளும், எல்லைமீறிய ஏனைய பாதுகாப்புச் செலவினங்களும் - சிறிலங்கா போன்ற ஒரு சின்னஞ்சிறிய தீவு நாட்டினால் தாங்கிக் கொள்ளக் கூடியதொன்றல்ல.

பாதுகாப்புச் செலவினம் ஒருபுறமென்றால், போர்காரணமாக ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகள், வருமான வீழ்ச்சி, தேசிய உட்கட்டுமானத்திற்கு ஏற்பட்ட சிதைவுகள், மனிதவள அழிவுகள் என்பனவற்றால் உண்டான இழப்புகள் இன்னொருபுறம் ஈடுசெய்யமுடியாத நெருக்கடி நிலைக்குக் காரணமாயிற்று.

அதேவேளை, கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் மீதான விடுதலைப் புலிகளின் பேரழிவை ஏற்படுத்திய தாக்குதல் - சிறிலங்காவின் சகல வருமான வள மூலங்களையும் ஒருசேர முடக்கியது. இதனையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மட்டுமல்லாது, தென்பகுதிப் பொதுமக்கள் அனைவரும் அச்சமும் பீதியும் கொண்ட உளவியல் குழப்பங்களுக்கு உள்ளாகும் நிலை உருவாகியது.

போர்முகப் படுதோல்விகளும், படைத்தரப்பில் ஏற்பட்ட பேரிழப்புகளும் முப்படையினர் மத்தியிலும் உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தி - படைத்தரப்பு மனோபலத்தை வெகுவாகச் சிதைத்ததுடன், சந்திரிகா தலைமையிலான பொ.ஐ. முன்னணி அரசு தேர்தலிலும் தோல்வியுறவைத்தது.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ட போர் நிறுத்தம், ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக - சமாதானத்திற்கான வாய்ப்பினை வழங்கும் குறியீடாகவே அறிவிக்கப்பட்டது. அதேவேளை, புலிகள் உச்சபட்ச மனோபலத்துடனும், பெருவெற்றிப் பெருமிதத்துடனும் இருந்தநேரம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதன்பின்னர் ஏற்பட்ட திருப்பங்கள் புதிய அரசுக்கு அவசியம் வேண்டியவைகளாக இருந்தன.

அறுதிப் பொரும்பான்மை போதாத நிலையிலும், திறைசேரி வெறுமனான நிலையிலும், படைத்தரப்பின் மனோபலம் குன்றிய நிலையிலும் - ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ரணிலுக்கு, சமாதானம் எல்லா வகையிலும் தவிர்க்கமுடியாத அவசியப் பற்றுக்கோடாக விளங்கியது.

இன்றைய சமாதானம் - சிறிலங்காவின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் இருந்து மீட்டுள்ளது. அரசை நெருக்கடியில் இருந்து பாதுகாத்துள்ளது. தென்பகுதி மக்களின் அச்சநிலையைத் தவிர்த்து - படைத்தரப்பின் தொடர் தோல்வியையும், இழப்புகளையும் நிறுத்தியுள்ளது.

இது புலிகள் மனம்விரும்பிக் காட்டிய சமாதான சமிக்ஞையின் பெறுபேறேயன்றி வேறல்ல...

ஆனால், சில நாட்களின் முன்னர் பாராளுமன்றில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறிய கருத்து சிரிப்புக்கிடமானதாக அமைந்துள்ளது.

'புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் - விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்குப் பல வாய்ப்புக்கள் கிடைத்திருக்கிறது. ஆனால், சமாதான முயற்சியை நிலையான தீர்வைநோக்கி நகர்த்துவதற்கு - நாங்கள் கொடுக்கின்ற விலையாக இதனைக் கருதுகிறோம்' என்று அவர் கூறியுள்ளார். இது அவரின் அதிகப்பிரசங்கித்தனமான கருத்தேயாகும்.

உண்மையில் சமாதான காலத்தைப் பயன்படுத்தி - சிறிலங்கா பாதுகாப்புப்படையினர்தான் தமது மனோபலத்தை மீளப்பெற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். நவீன ஆயுதங்களையும், கடற்படைக்கான கப்பல்களையும் படகுகளையும், பீரங்கிகளையும் கொள்வனவு செய்துவருகின்றதுடன் - அமெரிக்கா, சீனா பிரிட்டன் போன்ற நாடுகளின் இராணுவ நிபுணர்களின் பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் பெற்றுள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க - மாரப்பன சமாதானத்திற்காக விடுதலைப் புலிகளுக்கு விட்டுக் கொடுத்துள்ளதாகக் கூறுவது விசித்திரமானதாகும்.

முழுப் பூசணிக்காயை சோற்றுள் மறைக்கும் முயற்சியே இதுவாகும்.

# விடுதலைப் புலிகள்-முஸ்லிம்கள் சந்திப்பால் இருதரப்பு உறவுகளில் பாரிய முன்னேற்றம்!

## மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் சந்திப்புக்கள் மூலம் - மட்டக்களப்பு மாவட்டத்தில் இருதரப்பு உறவுகளில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுக்குமிடையில் - வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் மட்ட உபகுழு தொடர்பான கருத்துக்களை வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை பாரியளவில் மேற்கொள்வதற்கும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சுதந்திரமாக நடமாடுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை தாம் ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் ரமேஷ் மேலும் தெரிவித்தார்.

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், கே.அப்துல் நாசர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# சமாதான நடவடிக்கைகள் மூலமாக அபிவிருத்திக்கு வழியேற்படுத்தப்படும்

## கதிர்காமத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



சமாதானத்தை முன்னெடுத்துச்செல்லும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் மூலமாக - நாட்டில் அபிவிருத்திப்பாதைக்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்படும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கதிர்காமத்திற்கு நேற்றுச் சென்ற பிரதமர் அங்கு சமய வைபவங்களில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளரிடம் கருத்துக்கூறும்போதே, இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு உரிய சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

நாட்டில் உள்ள பத்தாயிரம் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக விமர்சிப்பவர்கள், அபிவிருத்தியை முன்னெடுக்கும் வகையிலேயே தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்படுவதை மறந்துவிடுகின்றார்கள். சமாதான முயற்சிகள் தொடர்பாக சரியான தகவல்களை அவர்கள் வழங்கமறுக்கிறார்கள். இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்த்து, சமாதான முயற்சிகளிற்கு அனைத்துப் பிரிவினரும் ஆதரவு வழங்கவேண்டுமெனவும் பிரதமர் கேட்டுள்ளார்.

# முஸ்லிம்களுக்கு தனியலகு நாடாளுமன்றில் விவாதம்!

## சபாநாயகரிடம் ஹக்கீம் கோரிக்கை

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனியலகு உருவாக்குவது தொடர்பாக விவாதிப்பதற்கு - எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஒழுங்குசெய்து தருமாறு அமைச்சர் ஹக்கீம் சபாநாயர் ஜோசப் மைக்கல் பெரேராவைக் கேட்டுள்ளார்.

இந்த நாடாளுமன்ற விவாத நாளன்று - முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் கொடிகள் கட்டப்பட்டு, பதாதைகள் தொங்க விட்டு - முஸ்லிம்கள் தமது கோரிக்கையை வலியுறுத்துவார்கள என, முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவரான கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

இதேநாளில் கொழும்பு நகரில் ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆரியகுளம் பகுதியில்

# சிதைந்த நிலையிலிருந்த மண்டையோடு கண்டுபிடிப்பு

யாழ் ஆரியகுளம் புகையிரத நிலைய விடுதிப் பகுதியில் உள்ள நிலத்தை - அப்பகுதி மக்கள் துப்பரவு செய்யும் போது மனித மண்டைஓடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அவ்விடத்தை துப்பரவு செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. மண்டையோடு கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலுள்ள காவலரணிலிருந்த இராணுவத்தினர் - மண்டையோட்டினை எடுத்து பொலித்தீன் பாக்கினுள்வைத்து அவ்விடத்தில் வைத்துவிட்டு - மக்கள் எவரும் அதனை எடுக்கக் கூடாது எனக் கூறியுள்ளனர்.

இந்த மண்டையோடு மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

# பொலிஸ் மா அதிபரை பாதுகாத்தால் தலைமையகத்தை சுற்றிவளைப்போம்!

## சிஹல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் பலவற்றுக்கு இலக்காகியுள்ள பொலிஸ் மா அதிபருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இருந்தால் - பொலிஸ் தலைமையகத்தை சுற்றிவளைப்போம் என்று, சிஹல உறுமய எச்சரித்துள்ளது.

சிஹல உறுமய அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே - கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்துவரும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க - பொலிஸ் மா அதிபருக்கு தண்டனை வழங்குவதோடு, தற்போதைய பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவருக்கு அடுத்த தரத்தில் உள்ளவரை பொலிஸ் மா அதிபராக நியமிக்கவேண்டும் என்றும், திலக் கருணாரத்ன கேட்டுள்ளார்.

ஜேசுதாசன் என்ற போதைவஸ்து கடத்தும் நபரோடு தொடர்பிருப்பதை மறுத்து ஆனந்தராஜா வெளியிடும் கருத்துக்கள், அவர் தொடர்ந்து தமது பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக வெளியிடும் கருத்துக்கள் எனவும் கருணாரத்ன குறிப்பிட்டார்.

இவரைப் பதவியில் நியமிக்கும் போதே, முதலில் தமது கட்சி எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மீன்பிடி அமைச்சரை பதவி விலக்குமாறு ஒரு இலட்சம் பேர் கையெழுத்திட்ட மகஜர்!

## ஜனாதிபதிக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளது

மீன்பிடி அமைச்சர் மகிந்த விஜயசேகராவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கும்படி - ஒரு லட்சம்பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

தற்பொழுது வடக்கு - கிழக்கு மீனவர்களின் கையெழுத்து சேகரிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு வாரங்களில் இந்த மகஜர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக, அகில இலங்கை ஐக்கிய மீனவர் சம்மேளனத் தலைவர் பிரேமசிறி மானகே தெரிவித்தார்.

வெளிநாட்டு மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிவழங்கிய மீன்பிடி அமைச்சர் மகிந்த விஜயசேகரா, மீனவர்களின் நலனில் அக்கறையற்று இருப்பதாக ஜனாதிபதிக்கு சமர்பிக்கப்படவுள்ள மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடல்வளத்தைப் பேணும்முகமாக - தற்போதுள்ள மீன்பிடி அமைச்சரை நீக்கிவிட்டு, புதிய அமைச்சர் ஒருவரை நியமிக்குமாறு அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சமூக நீதிக்கு உதவும் — சட்ட உதவி மன்றம்

இலங்கையில் நடைபெற்றுவந்த 20 ஆண்டு காலப் போரின் தாக்கங்களின் விளைவுகளும், முதலாளித்துவத்தின் "பூகோளமயமாக்கல்" (Globalisation) என்ற திசைதிருப்பலான, புதிய உலக ஒழுங்கு முறை (New World Order) என்பன தாக்கங்களும், ஒருபுறத்தில், ஒரு சாரார் மேலும், மேலும் செல்வந்தர்கள் ஆக்குகையில், மிகப் பெரும் பகுதியினரைப் பெரும் வறுமையினுள்ளும், அறிவு - ஆராயும் தன்மை வளர்ச்சிக் நிராகரிப்பினுள்ளும் வீழ்த்திவருகின்றன. இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கை முறை, சித்தாந்தம், அரசியல், ஏனையவைகளில் பெரும் தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

தமிழ் மொழியில் ஆத்தி சூடி, நல்வழி, கொன்றை வேந்தன், நாலடியார், திருக்குறள் மற்றும் அறநெறி நூல்களும், சிலப்பதிகாரம் மற்றும் காப்பியங்களும், சித்தாந்த நூல்களும், 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எழுதப்பட்டு வந்துள்ளன எனப் பாட நூல்களிலும், மேடைகளிலும், வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வரும்போதிலும், எமது சமூகத்தில் இன்று உரிமைகள் மீறல், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், வன்செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புகள், கொலைகள், ஏமாற்றுக்கள், மோசடிகள்,.... என்பவை பல்கிப்பெருகியே உள்ளன என்பதை, எடுத்த எடுப்பில் எவரும் நிராகரித்துவிட முடியாது.

ஒரு சமூகத்தில் உரிமைகள் மறுப்பு, அதிகார துஷ்பிரயோகம், உரிமைகள் மீறல், வன்செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புகள், கொலைகள், ஏனையவைகள் உண்மையில் அறிவும், ஆராயும் தன்மையும் அந்தச் சமூகத்தில் பரந்த அடிப்படையில் போதிய அளவிற்கு வளர்க்கப்படாமையால் தான் உருவாகுகின்றன.

மேலும், குறிப்பிட்டவொரு விடயம் தொடர்பாக நீதியைப் பெற்றுக்கொள்வதாயின், பாதிக்கப்பட்டவர் நீதியைக் கோர வேண்டும். பாதிக்கப்பட்டவர் உறங்குநிலையில் இருந்தால், அவருக்கு நீதி கிடைக்க மாட்டாது. பாதிக்கப்பட்ட ஒருவர், தான் உறங்குநிலையில் இருந்துவிட்டு, தனக்கு நீதி கிடைக்கவில்லை எனக் கூறுவது, ஒரு புறத்தில் அவரது அறியாமையையும், சுயநலப்போக்கையும், புத்திசுவாதீனமற்ற நிலையையும்தான் உறுதிப்படுத்தும். மறுபுறத்தில், அவரது செய்கையானது, சமூகத்தில் அநீதி நிலைத்துக்கொள்ள உதவும் ஒரு சமூக விரோதச் செயற்பாடுமாகும்.

இந்தநிலையில், மேற்குறிப்பிட்டவைகளைச் சமூகத்தில் குறைப்பதாயினும் சரி, இல்லாது செய்வதாயினும் சரி, இரண்டு முக்கிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் செய்யப்படவேண்டியுள்ளன. அவையாவன -

❖ எமது சமூகத்தின் அறிவையும், ஆராயும் தன்மையையும் போதிய அளவிற்கு வளர்த்துக்கொள்ளவும், அதனூடாக மனித வாழ்க்கையினை விஞ்ஞானரீதியாக விளங்கிக்கொள்ளவும் வழிவகைகளைத் திட்டமிட்ட விதத்தில் நடைமுறைப்படுத்துவது.

❖ சமூகத்தில் நடைபெறும் உரிமைகள் மீறல், அதிகாரத் துஷ்பிரயோகம், வன்செயல்கள், கொலைகள், பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்பு ஏனையவைகளுக்கு எதிராக மக்கள் நீதியைப் பெற்று, குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பதற்கான விழிப்புணர்வுகளைச் சமூகத்தில் ஏற்படுத்துவதும், நீதிமன்றங்களுடாக நீதியைப்பெற உதவுவதும்.

இவற்றுள் முதலாவதை, சமூகத்தால் அரசியல் தலைவர்களாகவும், சமூக, சமயத் தலைவர்களாகவும், அறிஞர்கள், கல்விமான்களாகவும் கருதப்படுபவர்களும், ஏற்கப்படுபவர்களும், கல்வித்திட்ட வகுப்பாளர்களும், ஊடகங்களுமே செய்யவேண்டும். பாடசாலைமுதல் பல்கலைக்கழகம்வரையான கல்விப் பாடத்திட்டங்கள், தகுந்த விதத்தில் மாற்றியமைக்கப்படவேண்டும். அவை மனித வாழ்க்கையினை விஞ்ஞான ரீதியாக விளங்கிக்கொள்ளவும், அதனடிப்படையில் மனிதவாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்வது, பூமியில் மனித இனம் நிலைக்கவும், மேன்மையான, பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் உதவும் என்பதை விளங்கி, சட்ட உருவாக்கங்கள் பற்றியும், நீதி பெறுகை, நீதி வழங்கல் என்பவைகள் பற்றிச் சரியாக அறிந்து, செயற்படவும் உதவும்.

மேலும், ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் சட்டங்கள், சாதாரண மக்களின நலன்களைப் பாதுகாக்கும், அவர்களது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் நோக்கங்களைக் கொண்டவையா? அல்லது ஒரு சாராரினதும், அதிகாரத்தில் இருப்பவர்களினதும் நலன்களையும், பாதுகாப்பையும் பேணும் நோக்கத்தைத்தான் கொண்டவையா என்பதை அறிந்துகொள்ளவும், இது பெரிதும் உதவும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இலங்கை போன்ற நாடுகளில் கல்விப் பாடத்திட்டங்கள் கடந்த காலங்களில் மாணவர்களதும், சமூகத்தினதும் அறிவையும், ஆராயும் தன்மையையும் போதிய அளவுக்கு வளர்த்துக்கொள்ள உதவும் வகையில் வகுக்கப்பட்டிருக்கவில்லை என்பது, கசப்பான பெரும் உண்மையாகும். இந்த நிலையில், இரண்டாவது விடயமும் மிகமுக்கிய இடத்தை இன்று பெறுகிறது.

கல்விப் பாடத்திட்டங்களில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்களைச் செய்ய; சட்டத்தரணிகளும், அவர்களது அமைப்புக்களும் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரமுடையவர்களுக்கு அழுத்தத்தையும், வலியுறுத்தலையும் மாத்திரமே செய்யமுடியும்.

இரண்டாவதைப் பொறுத்தமட்டில்- மக்கள் நீதியைப் பெறவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பதற்கான விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்துவதும், நீதிமன்றங்களூடாக மக்கள் நீதியைப் பெற உதவுவதுமாகும். இந்த அடிப்படை வேறுபாடுகளின் முக்கியத்துவங்களைப் விளங்கிக்கொள்வது மிகமுக்கியமானது.

எத்தனை மில்லியன் ரூபாய்கள் செலவில் நீதியைப் பெறுவது தொடர்பாகவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பது தொடர்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவென, நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பல நூறு விழிப்புணர்வுப் பட்டறைகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் நடாத்தப்பட்டால் என்ன, வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் கட்டுரைகள் எழுதப்பட்டால் என்ன, வாசிக்கப்பட்டால் என்ன, சாதாரண, வறிய மக்கள் நீதிமன்றங்களூடாக நீதியைப்பெற அவர்களுக்கு வழிவகைகள் செய்யப்படாவிடின், அது, உண்மையில், நீதி மறுப்புக்குச் சமனானதாகும். இங்குதான், சட்டத்தரணிகள் மிக முக்கியமாகின்றனர், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் **UNHCR**, மற்றும் உள்ளூர், சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் நடாத்தப்பட்டுவரும் சட்ட உதவி மன்றமும் (**Legal Aid Foundation**) மிக முக்கியமாகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை நீதிமன்றங்களூடாகப் பெறுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களை மாத்திரம் நடாத்துவது, உண்மையில் மக்கள் பயன்பெறமுடியாத, ஒரு போலி நடவடிக்கையென்றே கூறவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை - நீதிமன்றங்களூடாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வழியமைத்துக்கொடுக்கப்படாவிடின், அவர்கள் நீதிமன்றங்களூடாக நீதியைப் பெறமுடியாதநிலைதான் தொடரும்.

இங்குதான், வழிகாட்டல்கள், சட்ட உதவிகள் என்பன முக்கியமாகின்றன. கொழும்பு மற்றும் தூர இடங்களில் இருந்து வந்தும், உள்ளூர்களில் இருந்தும், நீதி பெறுவது தொடர்பான விழிப்புணர்வுப் பட்டறைகளையும், கருத்தரங்குகளையும், கூட்டங்களை யும் நடாத்தியபின்னர், பெருவேலைகள் முடிவடைந்துவிட்டன எனக் கருதுவது, உண்மையில், நீதி மறுப்புக்குத் துணைபோகும் ஒரு செயற்பாடே.

மக்கள் நீதியைப்பெற, மக்களுடன் கிராமங்கள் தோறும் செயலாற்றும் கிராம சேவையாளர்கள், மற்றும் சமூக சேவையாளர்களூடாக, மக்களுக்காக மாவட்டங்கள், பிரிவுகள் தோறும் செயற்படும் சட்ட உதவி மன்றங்களுடன் சாதாரண மக்கள் இணைக்கப்படாவிடின், வறிய, நொந்தநிலையில் இருக்கும் மக்கள் - நீதிமன்றங்களூடாக நீதியைப் பெறமுடியாத நிலைதான் உண்மையில் தொடரும்.

இப்படியான பெரும் குறைபாடுகளை நீக்கி, சமூகத்தில் உரிமைகள் மீறல், பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்புகள், கொலைகள், ஏகையவைகளுக்கு எதிராக வறியவர்களும், இடம்பெயர்ந்த மக்களும் நீதியைப் பெற 2002 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் **UNHCR** மற்றும் அமைப்புக்களின் உதவியுடன் செயற்படும் சட்ட உதவி மன்றமானது, யாழ். மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்றது.

**சட்டத்தரணி**
**சாந்தா அபிமன்னசிங்கம்**

# துன்பங்களுக்கு முகம்கொடுக்கும் மக்கள் பிரச்சினையிலிருந்து மீள வழி பிறக்குமா?



யாழ்ப்பாணக் குடாநாட்டை சூழ்ந்து காணப்படும் ஸப்ததீவுக் கூட்டத்தினுள் - பொன்கொழிக்கும் தீவாகவும், உல்லாசப் பயணிகளைக் கவரும் அழகும், வனப்பும் கொண்ட தீவாக விளங்கிய எழுவைதீவு - இன்று சோபையிழந்து, அழகொழிந்து போதிய அடிப்படை வசதிகளின்றிக் காணப்படுகின்றது. யாழ். குடாநாட்டின தரைவழித் தொடர்களற்ற ஏனைய தீவுகளைவிட, இத்தீவில் வசிக்கும் மக்கள் தம் நாளாந்த வாழ்க்கையினை முன்னெடுக்கக்கூடிய அடிப்படைத் தேவைகளான மருத்துவம், குடிநீர், போக்குவரத்து மற்றும் தொழில் சார் நடவடிக்கைகளை நிறைவுசெய்ய முடியாதவர்களாக தினம் தினம் அல்லல்படுகின்றனர்.

இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் சோதனை நடவடிக்கைகள், பாஸ் நடைமுறைகள் ஓரளவேனும் நீக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த மக்களுக்குக் கானல் நீராகவே புரிந்துணர்வு ஒப்பந்தம் காட்சியளிக்கிறது. இவர்களுடைய நடைமுறையில் இம்மியளவேனும் மாற்றம் ஏற்படவில்லை.

இதனாலே, ஆரம்பகாலத்தில் உல்லாசப் பயணிகளைப் பெருமளவில் தன்பால் கவர்ந்த இத்தீவு, இன்று வெளியிடத்தவர்களின் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அடுத்து மருத்துவ சேவையை பொறுத்தளவில் - ஊர்காவற்றுறை பிரதேசசபையின் ஆளுகைக்குட்ட சித்த ஆயுர்வேத வைத்திய சாலை உண்டு. இங்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை. கடமையாற்றும் வைத்தியர் வாரத்தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே பணிபுரிகிறார். ஏனைய நாட்கள் காரைநகரிலும் கடமையாற்றுவதாக அறியமுடிகின்றது. அத்துடன், வைத்தியரின் உதவியாளர் வார நாட்கள் முழுவதும் தங்கியிருந்து சேவை புரிந்தாலும் வைத்தியரின் பார்வைக்குட்பட்ட நோயாளர்களுக்கே, மருந்துகளை அவரால் வழங்கமுடிகின்றது.

குடிநீர்ப் பிரச்சினை இங்குள்ள தலையாய பிரச்சினையாகும். ஆழ்கடலால் சூழப்பட்டுள்ள இத்தீவில், ஒரு சில நன்னீர் கிணறுகளிலுள்ள நீரே பயன்பாட்டிற்கு உகந்தவை. அவையும் சூழல் வெப்பநிலை அதிகரிக்கும் காலங்களில் வற்றிவிடுகின்றன. இதனால், மக்கள் குடிநீருக்குப் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதற்கு மாற்றீடாக ஊர்காவற்றுறை பிரதேச சபையினரால் விநியோகிக்கப்படும் குடிநீர் - மக்களுக்கு போதுமானளவில் கிடைப்பதில்லை. குடங்களை அடுக்கிவிட்டு, நீண்ட நேரம் காத்திருந்து, வெறும் குடத்துடனேயே வீடுதிரும்பும்நிலை இம் மக்களுக்குப் புதிய விடயமல்ல.

மேலும், மின்சார வசதி இன்னமும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. மின்சார விநியோகத்திற்கென மின்சாரசபையினரால் இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டப்பட்ட மின் கம்பங்கள், இந்த மக்களுக்குக் காட்சிப் பொருளாகவே காணப்படுகின்றன. மேலதிக செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கான அறிகுறிகள் இதுவரை நடைபெறவில்லை.

அடுத்து இங்கு காணப்படும் பிரதான வீதிகள் - ஏறத்தாழ 50 வருடங்களாகச் செப்பனிப்படாதவை. பாரிய குன்றும், குழியுமாகக் காட்சியளிக்கின்றன. சில இடங்களில் வீதி இருந்ததற்கான தடயமும் இல்லை.



இந்த மக்களின் தொழில்வளப் பிரச்சினையாக மீனவர்கள் பெரும்பான்மையாக வாழும் இத்தீவில், பிடிக்கப்படும் மீன்களை பதப்படுத்துவதற்கோ, பாதுகாக்கவோ கட்டட வசதிகள் இல்லை. அத்துடன், மீன்களை தனியார் வளவுகளிலேயே வைத்து விற்கின்றனர்.

அண்ணளவாக 90 ஆயிரம் பனைகளைக் கொண்ட இந்தப் பிரதேசத்தில், பனம் பொருள் உற்பத்திகளை மேற்கொள்ள முடியா மலே இருக்கின்றது. இங்கு குடிசைக் கைத்தொழிலாக இழைக்கப்படும் நார்க்கடகங்களுக்கு- ஏனைய பகுதிகளில் நல்ல சந்தை வாய்ப்புண்டு. ஆனால், மக்களின் ஏழ்மை நிலை தொழிலைத் திறம்பட செய்ய இடம் கொடுப்பதில்லை.

மேலும் பருவகாலங்களில் சீவப்படும் கள்ளு- சேமிக்கவோ வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்யமுடியாமல் வீணாக நிலத்தில் ஊற்றப்படுகின்றது. இவற்றை சேமித்து வைத்து உற்பத்திசெய்ய, எதுவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

இத்தனை துயரங்களுக்கும் முகம் கொடுத்து, தினம் தினம் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குள் சிக்கித்தவிக்கும் இந்த மக்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் ஆதரவுக் கரம் கொடுத்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவேண்டும்.

எனவே, சமூகசிந்தை கொண்ட அனைத்துத் தரப்பினரும், சேவை புரிந்துவரும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களும் இந்த மக்களுக்கு ஒத்துழைப்பு நல்கி, 1991 ஆம் ஆண்டிற்கு முன் விளங்கிய அவர்களின் வாழ்வாதாரத்தையும், எழுவைதீவை மீண்டும் புதுப்பொலிவோடு இவர்களிடம் கையளிக்க வேண்டியது இந்த மக்களின் அவாவும், இவர்களுக்குச் செய்யும் கைமாறுமாகும்.

**கிருபா**

# பலஸ்தீனிய அகதி முகாம் மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல்!

## குழந்தைகள் உட்பட மூவர் பலி: 20 பேர் காயம்



பலஸ்தீனத்தின் காஸாப் பிரதேசத்தில் அமைந்துள்ள அகதிமுகாம் ஒன்றின் மீது- இஸ்ரேலிய டாங்கிகள், ஹெலிகொப்ரரின் உதவியுடன் மேற்கொண்ட தாக்குதலில்- ஒரு குழந்தை உட்பட 3 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர், 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

எகிப்திய எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள 'ராபா' என அழைக்கப்படும் இந்த முகாமை இரவோடிரவாக 40 டாங்கிகள் சகிதம் இஸ்ரேலியப் படையினர் சுற்றிவளைத்ததாக பலஸ்தீனியர்கள் தெரிவித்தனர்.

எகிப்திய எல்லை ஊடாக சுரங்கப் பாதையின் வழியே ஆயுதங்களை அகதி முகாமிற்குள் கொண்டு வருவதை தடைசெய்யும்முகமாகவே தாம் அந்த முகாமை முற்றுகையிடப்பட்டதாக, இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

அகதி முகாமை இருமுனைகளால் இஸ்ரேலியப் படைகள் முற்றுகையிட்டபோது, பலஸ்தீனியத் துப்பாக்கிதாரிகள், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து, இஸ்ரேலியப் படையினர் அகதிமுகாம் மீது - டாங்கிகளிலிருந்தும், ஹெலிகொப்ரரிலிருந்தும் தாக்குதலை மேற்கொண்டனர். அத்துடன், இஸ்ரேலிய ஹெலிகொப்ரரிலிருந்து எறிகணை ஒன்றும் முகாமினை நோக்கி ஏவப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முற்றுகையின் போது - முகாமிற்கு அருகில் அமைந்திருந்த பல வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வீடுகளிலிருந்து தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதனாலேயே - தாம் அந்த வீடுகளின் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை -

பலஸ்தீனியத் தலைவர்களுக்குள் முரண்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட அகமட் கூரேய் தான் பதவியில் இருந்து விலகப்போவதாகத் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனநாயகம், பெண், சிறுவர் உரிமைக்காக

# ஈரான் நாட்டு பெண் நீதிபதிக்கு இந்த வருடத்துக்கான நோபல் பரிசு



2003 ஆம் ஆண்டின் சமாதானத் திற்கான நோபல் பரிசு ஈரானைச் சேர்ந்த "சிரின் எபாடி" க்கு வழங்கப்படவுள்ளது. ஜனநாயக உரிமைகளுக்காகவும், பெண்கள், குழந்தைகளின் உரிமைகளுக்காகவும் போராடிய முதல் பெண் இவர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

56 வயதுடைய எபாடி நீதிபதியாக ஈரானில் கடமையாற்றி வந்துள்ளார். அரசியல்வாதிகள் சிலரின் நடத்தைகளை விமர்சித்தமைக்காக சிறை செல்லவும் நேர்ந்தது.

மனித உரிமைகளுக்கும், ஜனநாயகத்திற்கும் இவா ஆற்றிய பணிக்காக நோபல் பரிசளிப்பதாக, நோர்வேயில் அமைந்துள்ள "நோபல் கமிட்டி" தெரிவித்திருந்தது.

இவரின் வெற்றிச் செய்தி உலகின் முன்னணிப் பத்திரிகைகளிலெல்லாம் தலைப்பு செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.



இவர் நீதிபதி, சட்டத்தரணி, விரிவுரையாளர், எழுத்தாளர், மனித உரிமைக்காக குரல்கொடுத்தவர் என பல்வேறு நிலைகளில் தனது பணிகளை வெளிப்படுத்தி இருந்தார்.

இவர் கடும்போக்குக் கொண்டவர்களாலும், மதவாதிகளினாலும், கடுமையாக விமர்சிக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு 3 வாரங்கள்வரை சிறைவாசம் அனுபவித்தார் - 5 ஆண்டுகள் தொடர்ந்து சட்டத்தரணியாக பணியாற்றுவதில் இருந்து தடைசெய்யப்பட்டிருந்தார்.

இந்தப் பரிசை வென்ற 3 ஆவது முஸ்லிம் பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை,

அமெரிக்காவைச் சேர்ந்த போல்.சி.லோற்றர்பேர் பிரிட்டனைச் சேர்ந்த சேர்.பீற்றர் மான்ஸ்பீல்ட் பௌதீகவியல் மற்றும் மருத்துவத்துறைக்காக நோபல் பரிசினைப் பெற்றுள்ளனர்.

மனிதனது உடலின் உட்பாகங்களில் தொழிற்படும், விம்பங்களைக் கண்டுபிடித்ததற்காகவே இந்தப் பரிசு இருவருக்கும் வழங்கப்பட்டது.

## ஈராக்கில் இதுவரை கொல்லப்பட்ட

# பிரிட்டன் படைவீரர்களுக்காக மதப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு

ஈராக்கில் இதுவரை கொல்லப்பட்ட 51 பிரித்தானிய போர் வீரர்களின் உறவினர்கள் - இறந்தவர்களுக்கான மதப்பிரார்த்தனையை சென்போல் தேவாலயத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளார்கள்.

பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களும், அரசாங்க அதிகாரிகள் மற்றும் படையினரும் இந்த பிரார்த்தனையில் பங்குகொள்ளவுள்ளார்கள்.

இந்த மரணங்கள் தவிர்க்கப்படக் கூடியவை எனக்கூறி உறவினர்கள் சிலர் - பிரதமர் ரொனி பிளேயரை ஈராக்கிற்கு எதிரான போரில் இருந்து விலகிஇருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

முன்னர் நாடுகளை வெற்றிகொள்ளும்போது பிரித்தானியாவில் படையினரின் வெற்றி ஊர்வலங்கள் நடாத்தப்படுவது வழக்கமாகும். ஆனால் இம்முறை அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்தபோது, ஈராக்கிய மக்களின் மனங்களை இதுவரை தாங்கள் வெற்றிகொள்ளவில்லை எனவும், கொடிய ஆட்சியொன்றே அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெ.படையினர் மீது தாக்குதல்

## இருவர் பலி; பலர் படுகாயம்



ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில், 2 அமெரிக்கப் படை வீரர்கள் கொல்லப்பட்டும், நால்வர் காயமடைந்துள்ளதாகவும் - அமெரிக்க இராணுவம் அறிவித்தது.

வீடு வீடாகப் படையினர் தேடுதல் நடத்தியபோது, அமெரிக்கப் படையினருக்கும் முஸ்லிம் தலைவர் ஒருவரை பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டிருந்த துப்பாக்கிதாரிகளுக்கும் இடையே இந்தச் சண்டை ஏற்பட்டதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

# 600 அல்கொய்டா சந்தேகநபர்கள் விசாரணைகளின்றி தடுத்துவைப்பு!

## சர்வதேச மன்னிப்புச்சபை அதிகாரி குற்றச்சாட்டு



அல் - கொய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 600 பேர் - குஅன்ரனமோ தீவில், 2 ஆண்டுகள்வரை விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று, சர்வதேச மன்னிப்புச்சபையின் அதிகாரியான கிரிஸ்தோபி கிறோட் நியூயோர்க் ரைம்ஸ் பததிரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இவர்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் இதுவரை நீருபிக்கப்படவில்லை. எனினும், அவர்கள் தமக்காக வாதாடுவதற்கு வழக்கறிஞர்களை நியமிப்பதற்கோ அல்லது அவர்கள் மீதான வழக்குகளை மேற்கொள்வதற்கோ வசதிகள் ஏற்படுத்தப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக கிரிஸ்தோபி கிறோட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் அமெரிக்க நீதிபதிகள், இராணுவ அதிகாரிகள், அரசியல் அறிஞர்கள் ஒருங்கிணைந்து அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் இந்தவிடயம் தொடர்பாக ஆராயுமாறு கேட்டிருந்தனர்.

இதனையடுத்தே - சர்வதேச மன்னிப்புச்சபை அதிகாரியான கிறோட் தடுப்பு முகாமிற்கு சென்று, அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலமைகளை பார்வையிட்ட பின்னரே, கைதிகள் விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக தெரிவித்தார்.

அத்துடன் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள முகாமை - தடுப்புமுகாம் என்று கூறுவதை விட, விசாரணைக்காக அமைக்கப்பட்ட மையம் என கூறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.




மகா வித்துவான் வீரமணிஐயர் அவர்கள் மறைந்த செய்தி கொடுத்த அதிர்ச்சியிலிருந்து, மீள்வதற்குமுன் கலைப்பேரரசு ஏ.ரி.பி.காலமான செய்தி கலையுலகிற்கு மற்றுமொரு பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

எழுத்தாளர், பேச்சாளர், நடிகர், நாடக ஆசிரியர், நாடகத்தயாரிப்பாளர் என்பவற்றுடன் ஆசிரியர், அதிபர் என்று பல்துறையிலும் சமூகத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தவர் கலைப்பேரரசு அவர்கள்.

நேற்றுக்காலை பிரபல எழுத்தாளரும் இலக்கியவாதியுமான செம்பியன் செல்வனை நீண்ட நாட்களின்பின் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இச்சந்திப்பில் கலைப்பேரரசு பற்றியும், குரும்பசிட்டி மண்ணுக்குரிய பெருமையையும் பற்றியே செம்பியன் அதிகம் பேசினார். விருந்தோம்பும் பண்பு பற்றியும், சொன்னபோது அமரர் கனகசெந்திநாதனையும் நினைவு கூர்ந்தார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு என்று நினைக்கிறேன்.

"பன்னீரன்" பெருமாளும் நானும் போயிருந்த போது, அன்றிரவு கலைப் பேரரசுவின் வீட்டில் தான் எங்களுக்கு விருந்து. கவிஞர் வி.கந்தவனமும் இதில் கலந்து கொண்டதாக நினைவு.

1964 ஆம் ஆண்டு டிசம்பர் கடைசியில் வடக்கில் பெரும் சூறாவளி தாக்கியது. நூற்றுக்கு மேற்பட்ட படகுகளில் கடற்தொழிலுக்குச் சென்றவர்களும் படகுகளும் சூறாவளியினால் காவு கொள்ளப்பட்டுவிட்டன.

ஒரே இரவில் அநாதைகளாக்கப்பட்ட இந்தக் கடற்தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு, உதவுவதற்கென "ஈழநாடு" பத்திரிகை நிதி திரட்டியது. எதிர்பார்த்தமாதிரி நிதிவந்து குவியவில்லை. நிதி திரட்டுவதற்கு 'ஈழநாடு' ஊழியர் சார்ப்பில் 'கதம்ப நிகழ்ச்சி' ஒன்றுக்கு ஏற்பாடு செய்தோம். கலைஞர்கள் பலரிடமும் இந்த நிகழ்ச்சியில் கலந்து பங்களிப்புச் செய்யும்படி கேட்டோம். பலரும் சம்மதித்துப் பங்குகொண்டனர். அவர்கள் எங்களிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் இந்நிகழ்ச்சியில், இறுதியாக நாடகம் ஒன்று அளிப்பதாகச் சொல்லியிருந்தார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தின் பின்புறமுள்ள திறந்தவெளி அரங்கில் கதம்பநிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்தோம்.

உரிய நேரத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கி நடந்துகொண்டிருந்தன. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சொன்னபடி கலைஞர்கள் வந்துகொண்டிருந்தார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சி தொடங்கும் போதும், அடுத்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடு பற்றிக் கவனித்துக் கொண்டிருந்தேன். இறுதி நிகழ்ச்சி ஏ.ரி.பியின் நாடகம். அவர் என் கண்ணில் படவில்லை. மேடைக்குப் பின்னால் மற்றவர்களையும் பார்த்து அடுத்த நிகழ்ச்சிக்குத் தயார் செய்துவிட்டு எங்கே ஏ.ரி.பியைக் காணவில்லையே என்று சற்றுப் பதட்டத்துடன் விசாரித்தேன்.

'இங்கே உங்கள் அருகிலேயே நிற்கிறேன், கவனிக்கவில்லையா?' என்று குரல் கேட்டுத் திரும்பினேன். பெரிய கிரீடத்துடன் அவர் அரசானாகக் காட்சியளித்தார்.

இக்காட்சி என்றும் என் மனதில் மறக்கமுடியாது நிலைபெற்றது.

குரும்பசிட்டியில் அவர் கட்டிய அழகான வீடு போரினால் நாசமானது அவருக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

கலைப் பேரரசின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பது தவிர எம்மால் என்ன செய்ய முடியும்.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான கருத்தமர்வுகளும், வெளிப்பாடுகளும் என்றொரு நிகழ்வு இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவிருப்பதாக ஒரு நல்ல செய்தி கிடைத்தது.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கும் இனமுரண்பாட்டுப் பிரச்சினைகளை விளக்குவதற்குமான நோக்கோடு இக்கருத்தாடல் நிகழ்வு நடைபெறவிருக்கிறது.

தமிழ் - சிங்கள படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் ஒன்றிணைந்த அமைப்புக்கள் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளனவாம்.

சில ஊடகங்கள் இனங்களுக்கிடையே சிண்டுமுடியும் வேலையிலீடுபட்டிருக்கும் இச்சமயத்தில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் இந்த முயற்சிவரவேற்கப்பட வேண்டும். முயற்சி வெற்றியளிக்கட்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்த அரசியல் உள்நோக்கம் கொண்ட தீய சக்திகள் முயற்சி!

## திருகோணமலை அரசியற்துறையினர் குற்றச்சாட்டு

(திருகோணமலை)

மூதூரில் சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையே இனமோதல்களைத் தூண்டிய, தீய அரசியல் உள்நோக்கம் கொண்ட சக்தி, மீண்டும் கிண்ணியா ஆலங்கேணிப் பிரதேசத்திலும், அதேபோன்ற மோதல் நிலையை உருவாக்க முனைந்துள்ளது.

முஸ்லிம் - தமிழ் மக்களே பொறுமையுடனும், புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ளுங்கள் என்று, கடந்த 3 தினங்களாக திருகோணமலை - கிண்ணியா பிரதேசத்தில், ஆலங்கேணி கிராமத்தில் ஏற்பட்ட முஸ்லிம்- தமிழ் இனமோதல் நிலைமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறையினரால் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுவரை காலமும் புரிந்துணர்வுடன் செயற்பட்டவர்களுக்கு இடையே குழப்பத்தை ஏற்படுத்தி புரிந்துணர்வை குலைத்து மோதலை உருவாக்க முனையும் சக்தி ஒன்று, செயற்படுகின்றது.

அண்மையில், கிண்ணியா முஸ்லிம் பொதுமக்களை அழைத்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடினோம். இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில சுயநல அரசியல் தலைமைகள் இப்பிரதேசத்தில் குழப்பநிலை ஒன்றை உருவாக்கி, தமது அரசியல் இலாபங்களுக்காக இரு இனங்களையும் மோதவிட விரும்புகிறது. எனவே, இதனைப் புரிந்துகொண்டு பிரச்சினைகளைச் சுமுகமாகப் பேசித்தீர்த்துக் கொள்ளுமாறும், பொறுமை காக்குமாறும் இரு தரப்பையும் நாம் கேட்டுக்கொள்கிறோம் என இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4,10)

## நாற்சந்தி

அண்மையில் யாழ் நகரில் ஒரு தனியார் கல்விக்கூடம் விஷமிகள் சிலரால் தீக்கிரையாகப்பட்டது. தீ மூண்டநேரம் அயலவர்கள் விரைந்து யாழ்.மாநகர தீயணைப்புப் படையினரின் உதவியைக் கோரினர்.

தீயணைப்புப் படையினர், தமது வாகனத்தில் அங்கு வந்தநேரம் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் வந்துவிட்டார்கள். இனித் தீ பரவாது தடுக்கப்பட்டுவிடும் என மக்கள் ஆவலோடு நின்றனர். அவர்கள் அப்போது தான் தீயணைப்புக் கருவிகள் மற்றும் சாதனங்களின் செயற்படாத்தன்மையை திருத்துவதில் ஈடுபட்டனர். 'என்னையா இது ...' என்று மக்கள் கேட்டதற்கு 'கன நாள் யாழ்ப்பாணத்தில் தீ விபத்து ஏற்படவில்லை ஆதலால் பராமரிப்பின்றிக் கிடந்துவிட்டது' என்றார்களாம். 'எவ்வளவு பொறுப்பற்ற பதில்!' தீயணைப்புப் பிரிவு, ஒரு மருத்துவமனையின் அவசரப் பிரிவு மாதிரி.... ஒரு இராணுவத்தின் கொமாண்டோ அணி போன்று எந்தக் கணத்திலும் தயார் நிலையில் இருக்க வேண்டிய ஒன்று என்பதை அவரகளுக்கு எவரும் அறிவுறுத்தியதே இல்லையா...?

கடைசியில் எரிந்த சாம்பலை அணைத்துவிட்டு சென்றார்கள் என்றார் அயல் வீட்டுக்காரர் ஒருவர்.

முன்னரும் யாழ்.நகரின் மையப் பகுதியில் ஒரு புடைவைக்கடை தீப்பற்றி எரிந்தபோதும், இதே நிலைதான் இருந்தது என்றார் மற்றொருவர் வெறுப்புடன்...

'அடிக்கடி தீக் குளிக்கும் தேசத்தில் இப்படி ஓர் தீயணைக்கும் படையா?' என்று சலித்துக்கொண்டார் வைமன் றோட்டைச் சேர்ந்த ஒரு பெரியவர்.

-தெருவாசி

## இராணுவத் தளபதியின் சேவை நீடிப்பு

தேர்தல் ஆணையாளராக தயானந்த திசாநாயக்க மீண்டும் நியமிக் கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் சேவைக்காலம் எதிர் வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கூட்டு நடவடிக்கை தலைமை கட்டளை அதிகாரியாகவும் இராணுவத்தளபதி நியமிக்கப்பட்டார்.

## கொழும்பில்...

தெரிவித்தார்.

குண்டு வெடிப்பு நடைபெற்றமைக்கான காரணத்தை கண்டறியும் பணியில் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தப் பகுதி தடைசெய்யப்பட்டு துப்பறியும் புலனாய்வுப் பிரிவினர் அந்தப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் தெரிவித்தார்.

## அயர்லாந்து கலந்துரையாடல்...

இலங்கை அரசின் திட்டவரைபு தொடர்பாக ஆராய்வதற்கு மக்கள் பிரதி நிதிகளைச் சேர்ந்த 28 பேருக்கும் விடுதலைப் புலிகள் அனுமதியளித்துள்ளதாக தெரிவித்த அவர், இலங்கை அரசின் அதிகாரிகள் அரசியல் யாப்பு தொடர்பாக ஆராய்வதற்கும் இதில் கலந்துகொண்டு உரையாற்றியும் உள்ளதுடன், சர்வதேச அரசியல் நிபுணர்களும் கலந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகிய இருவருமம் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம், 17 ஆம் திகதிவரை நோர்வேக்குச் செல்வதற்கு, அந்த நாட்டின் அரசு ஏற்பாடு செய்திருந்தது.

இவர்களது நோர்வே விஜயத்தின்போது அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜான்.பீற்றசன், நோர்வே நாட்டின் சமாதான ஏற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூரிலுள்ள தமிழ் மக்களையும் சந்திப்பர் எனவும், நோர்வேயின் நகரான பேகனுக்கும் செல்வார்களென நோர்வே அரசு அறிவித்துள்ளது. நோர்வே விஜயத்தின் பின் இவர்கள் டென்மார்க் செலவார்களென அவர் மேலும் தெரிவித்தார்.

## இடைக்கால வரைபு...

சமாதான முன்னெடுப்புகளோடு சம்பந்தப்பட்ட பிரிவினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறோம். இதில் எங்களுடைய இடைக்கால வரைபுக்கு மேலும், வலுவூட்டக்கூடிய பல கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

இடைக்கால வரைபு சம்பந்தமாக அதிகாரங்கள் அதனுடைய கட்டமைப்புக்கள், சம்பந்தமான விழுமியங்களை நாங்கள் எங்கள் நிபுணர்களோடும், சர்வதேச சட்ட நிபுணர்களோடும் கூடி ஆராய்ந்து பல முடிவுகளை எடுத்திருக்கிறோம். அந்த முடிவுகளை எங்கள் தலைவரிடம் சமர்ப்பித்த பின்னர், இறுதியாக நோர்வே ஊடாக அரசுக்கு சமர்ப்பிக்க இருக்கிறோம்.

வட அயர்லாந்து நிபுணர்கள் பல கருத்துக்களை பரிமாறியிருக்கிறார்கள். ஆனால், அயர்லாந்து அரசாங்கம் பங்குபற்றவில்லை. அவர்கள் எங்களுக்கு, எங்களுடைய சட்ட நிபுணர்கள் ஒன்றுகூடுவதற்கும், இட வசதிகள் போன்றவற்றை வழங்கினார்கள். இதனால் அவர்களின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கிறது.

இந்தக் கலந்துரையாடல்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. பிணக்குகள் நடந்த தேசங்களின் இடைக்கால நிர்வாகம் எவ்வாறு அமைப்பது, உடன்படிக்கைகள் பற்றிய கருத்துக்களை உள்வாங்கக் கூடியதாக இருந்தது. எங்களுடைய சூழ்நிலை வித்தியாசமாக இருந்தாலும், அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோது, எங்களுடைய வரைபு விடயத்தில், மிகமிக பயனுள்ளதாக அமைந்தது.

அடுத்ததாக டென்மார்க் அரசின் அழைப்பை ஏற்று டென்மார்க் செல்ல இருக்கிறோம். அது முடிந்த பின்பு நோர்வே அரசின் அழைப்பை ஏற்று அங்கு செல்ல இருக்கிறோம். அங்கே நோர்வே வெளிவிவகார அமைச்சரை சந்திக்க இருக்கிறோம். இதன் பின்னர் தாயகம் திரும்ப இருக்கிறோம் என்றார் தமிழ்ச்செல்வன்.

(ய,ச,சி)

## பிரதமர்...

ரிக்காவிற்கு சார்பாக பேசியமை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு பாரிய விளைவை ஏற்படுத்தியுள்ளது எனவும், சரத் அமுனுகம தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மாநாட்டில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தொழிலாளரை அடக்கி ஆளும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் இதற்கு எதிராகவும் போராட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் - எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (01)

## சமூகத்தால் ஒதுக்கப்பட்ட...

லாந்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அரசியல் நிபுணத்துவ சந்திப்பில் முக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழர் வரலாற்றில் இவ்வாறான முக்கியத்துவம் கொடுக்கபட்டதாக நான் அறியவில்லை.

எனவே, அரசியலில், கல்வியில் எமது சமூகத்தில் அனைத்துப் பணிகளிலும் பெண்கள் பங்கு முக்கியத்துவமாக உள்ளது. அந்த அடிப்படையில் எமது நிலத்தை மட்டும் மீட்கும் போராட்டமல்ல. அனைத்து அடக்கு முறைகள், சாதிமத வேற்றுமைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் என்ற நிலையை மாற்றுவதுதான். தமிழ் மக்களின் கௌரவ வாழ்வுக்காக பல்லாயிரக்கணக்கான போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். அவர்களது கனவு நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. சமூகத்தில் பெண் அடிமை பேச்சில் மட்டுமல்ல அவை செயலிலும், வடிவிலும் தான் உள்ளது. எமது தமிழீழப் பெண்கள் தேசியத் தலைமையின் கீழ் அணி திரண்டுள்ளமையால் எமது கனவுகள், ஆசைகள் நிறைவேறிவரும். பெண்கள் தற்போது ஒன்றுப்பட்டு நிறுவனமயப்பட வேண்டும். ஆணும் சரி பெண்ணும் சரி தமக்கு தாமே அடிமையாக உள்ளனர். இந்த நிலைமாறி உடைத்தெறியவேண்டும். தமிழர்கள் இன்று ஒன்றுபட்டுள்ளனர். ஆனால், இதனை சிங்கள சக்திகள் குழுப்ப முற்படுகிறார்கள். தமிழன் தன்னைத்தானே தலை விதியை நிர்ணயிக்கின்ற ஓர் சூழ்நிலை ஏற்படும்.

மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் அரசியல்வாதிகள் சிறுசிறு உதவிகளை வழங்கிவருவதை நினைத்து நாம் வெட்கப்படுகின்றோம். எனவே, எமது விடுதலைப் போராட்டம் வளர்ந்துள்ளதென்றால் அதற்கு தனித்துவமான வாழ்க்கை முறையும் காரணம் ஆகும்.

தமிழன் தன் வாழ்க்கையின் கௌரவத்தை இழப்பதற்காகத் தான் இந்த உதவிகளே ஒழிய தமிழன் கௌரவத்துடன் வாழவல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சில சக்திகள் தமது அரசியல் பலத்தை பிரயோகித்து மாறாத அரசியல் சிந்தனையுடன் வாழும் மக்கள் இதனை தெளிவாகப் புரிந்து கொள்ளவேணடும்.

நிலம் இல்லாமல் பயிர் வளராது- நிலம் இல்லாமல் எமது சந்ததி நிலைக்காது நிலம் தான் வாழ்வுக்கு ஒளியைத் தரும்.

(ய,ச,சி)

## 2 ஆம் லெப்.மாலதி 16 ஆவது ...

நினைவு நாள் நேற்று 5 மணிக்கு மாலதியின் தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலய மாணவர்களும், அச்சுவேலி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவர்களினதும் பாண்ட் வாத்திய இசையுடன் மாலதியின் ஊர்திக்குப் பின்னால் பெருமளவான மக்களும், போராளிகளும் கோப்பாய் கந்தசுவாமி கோயில் சென்றடைந்து அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் 5.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் பொது ஈகச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த பல்லவன் ஏற்றினார். தேசியக் கொடியினை மாலதி படையணித் தளபதி தமிழ்செல்வி ஏற்றினார். மாலதியின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரினை வீரவேங்கை நாராயணனின் பெற்றோர் ஏற்றினர். மலர்மாலையினை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில்அன்பன் அணிவித்தார்.

தொடர்ந்து கோப்பாய் வடக்கு மாதர் சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியை செல்வி மனோன்மணி கந்தையா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. கோப்பாய் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சிவகடாச்சம் உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி உரை நிகழ்த்தினார். தொடர்ந்து நினைவுரையினை யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி புஸ்பரெட்ணமும், அதனைத் தொடர்ந்து நாடக நிகழ்வும் அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியின் நினைவுரையும் இடம்பெற்றது. தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றது. இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இதேவேளை- கிளிநொச்சியில் டிப்போ சந்தியிலிருந்து ஆரம்பமான மாலதியின் நினைவுப்படம் தாங்கிய ஊர்திப் பேரணி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது.

விளையாட்டு மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை 2 ஆம் லெப் மாலதி படையணியின் சிறப்புப் தளபதி கேணல் விதுஷா ஏற்றினார். மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரினை படைத்துறையைச் சேர்ந்த தினேஷ் மாஸ்ரர் ஏற்றினார்.

நேற்று மாலை 5 மணியளவில் மன்னார் வீதியில் ஆரம்பமான பேரணி வவுனியா சிறுவர் பூங்காவை சென்றடைந்தது. முதன்மைச் சுடரினை மாவீரர் மாதவனின் தாயாரும், மாவரர் விக்கியின் தாயாரும் ஏற்றிவைத்தனர்.

2 ஆம் லெப்.மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரினை மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றிவைத்தார். மலர் மாலையினை போராளி அஸ்வினி அணிவித்தார்.

மட்டக்களப்பு மகிழடித்தீவில் 2 ஆம் லெப்.மாலதியின் நினைவுநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

பொதுச்சுடரினை புனித மரியாள் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி திரேசாராணி ஏற்றிவைத்தார்.

(03,20,202,04,10,108)

INFORMATION TECHNOLOGY PARK

*under the purview of Ministry of Rehabilization, Resettlement & Refugees*
*272,Stanly Road,Jaffna,Srilanka.*

email:itp@sltnet.lk office:021 222 3641

தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் 05-10-2003 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

Certificate Courses

| courses | Duration | Course | Duration |
|---|---|---|---|
| Ms-Word | 3 | Webpage & Graphic design | 4 |
| Ms-Excel | 3 | c/c++ | 4 |
| Ms-Access | 3 | Visual Basic | 4 |
| Page Maker | 3 | Java | 4 |
| Corel Draw | 3 | Oragle | 4 |
| Auto CAD | 3 | Hardware | 4 |
| | | Internet & E-Mail | 4 |
| | | HTML & Java Script | 4 |

Fee 1000/= Fee 1800/=

Diploma Course (0n line)

Diploma in Pc Application & office management (including Ms-Office syllabus)

Duration - 3 Months Fee - 2750/=
(week day batches only)

குறிப்பு:-
1). புதிய பிரிவுகள் யாவும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் (கச்சேரி முன்பாக) நடைபெறும் என்பதனைக் கருத்தில்கொள்க.
2) பயிற்சி நெறிகள் யாவும் நவம்பர் மாத முதல் வாரத்திலிருந்து ஆரம்பமாகும்.

centre for Information Technology

For further details course Manager (சி/1669) Information, Director.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

இக்கல்வியாண்டுக்கான இறுதிப்பிரிவுகள்
18.10.2003 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன

புலமைப்பரிசில் திட்டம் 2003 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிப் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்

இப்பிரிவில் அனைத்து Diploma கற்கைநெறிகளும் ஆரம்பமாகும்

INSTITUTE OF INFIRMATICS STUDIES
100, Clock Tower Road Jaffna (சி-1666)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1554 திகதி: 10.10.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| X | 5 | 2 | 9 | 0 | 3 | 5 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.